மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1—12
வேளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வரு தை-மீ 17-உ (30—1—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 40.

## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற
**சுத்த கதர் ஜவுளிகள்.**

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், சரிகை துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. மில் சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்து கொள்ளலாம்.

மதரஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதரஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துகாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அசோஸியேஷன்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்ட்,
(திருப்பூர் மார்க்கம்.)

## அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" கோமதிதிப் பண்டு லாட்டரிச் சீட்டு.

சீட்டு 1-க்கு ரு. 1 விதம் மொத்தம் சீட்டுகள் 33000-க்கு 3381 பிரைஸ்கள்.

1வது பிரைஸ் ரு 3000, 2வது பிரைஸ் ரு 1500, 3வது பிரைஸ் ரு 1000, 4வது பிரைஸ் ரு 500, 5, வேது பிரைஸ் ரு 200.

100 ரூபாயில் 5பிரைஸுக்கு ரு 500, ரு 50ல் 20க்குரு 1000, ரு20ல் 50க்கு ரு 1000, ரு 10ல் 100க் குரு 1000, ரு 5ல் 200க்கு ரு 1000, ரு 3ல் 600க்கு ரு 1800, ரு 2ல் 2400க்கு ரு 4800 ஆக பிரைஸ் 3381க்கு ரு 17500, புக் 1500க்கு கமிஷன் ரு 3000, குமாஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரு 1800 தனிப்பிரைஸ் ரு 1700, பண்டுக்கு ரு 9000, ஆக ரு 33000.

1. (4—5—1927) பிரபலமும் சித்திரைமீ 22உ பூர்த்தியையன்று பிரைஸ்எடுக்கப்பெறும்.

2, 33000 சீட்டுகளுக்கு மேல் விற்றனேயாகு மானால் ஈவுப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் ஈவுப் படி குறைக்கப்பெறும்.

3. 1உது பிரைஸ் முதல் வேது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4 பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற் குள் ரசீதை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ள வேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை யனுப்பக்கூடும்.

5 சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ரூ. மு. நாடார், பத்திராதிபர், "நாடார் குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை. என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சு. ஆ. முத்து நாடார், பத்திராதிபர்,
அருப்புக்கோட்டை.


இனம்! இனம்!!

டேபிள் டயம்பீஸ் இனம்!!!



(தீநப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனம் டைம்பீஸுடன் ஷிரிஸ்டு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,
மதராஸ்.



## மனைவி தோழனாயிரு

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா விஜைப் பாதிரி ரஸ்புட்டினின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் மேஷக்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்.

படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மெஸ்மெரிஸா

படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,
சென்னை.



## எதுவேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனோவசிய சாஸ்திரம் | 1—8 |
| ராதி சாஸ்திரம் | 1—4 |
| ஸ்திரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனரதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனுதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மகா சந்தனுதித் தைலத்தை அரசர்களு ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2—4—0. 6-அவுன்ஸ் 1—3—0

தமிழ் மருத்துவ சாலை,
220 நங்கசாலைத் தெரு, சென்னை.



## ஜீர்ணமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.

ஆஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வராகாசங்கள் முதலிய வற்றை உடனே குணபடுத்தி விடும். நல்ல ரசித்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணு 5.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.



## ரூபாய் 500 இனம்!

## நல்லெண்ணை.

சுத்தமான எள்ளு எண்ணைக்கு உத்திரவாதம் செய்கிறோம்.

மணிலாக்கொட்டை கடலை எண்ணை கலப்படமில்லாத சுத்தமான நல்லெண்ணை கிடைப்பதோ மிகவும் துர்லபம்.

இந்தக் குறிப்பைத் தீர்த்துவைப்பதற்காகவே தனியாகச் செக்குவைத்துப் பரிசுத்தமான தேர்ந்தெடுத்த எள்ளாக வாங்கி சுத்தம்செய்து நல்ல வெல்லம் கலந்து தனியாக ஆட்டி விற்கிறோம். இதில் எதாவது கலப்படம் இருக்கிறதாக நிரூபணை செய்கிறவர்களுக்கு 500 ரூபாய் இனம்.

வேண்டியவர்கள் விபரிக்கவும் விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

வி. ரங்கசாமி செட்டியார்,
கச்சேரி வீதி, "குடி அரசு" ஆபீசுக்கு
அடுத்த கட்டடம், ஈரோடு.



## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹஸ்யம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாண மாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.

64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி, மதராஸ்



## நம்பிக்கையான வியாபாரஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள்
கதர் துணிகள் மருந்துகள்
கடிகாரம் ஷாப் சாமான்
முதலிய இதர எல்லா
சாமான்களும்
கிடைக்கும்.
முன்பணத்துடன் ஆர்டர்
அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி
கம்பெனி.

தபால் பெட்டி 292.
6—99 பவழக்காரத்தெருவு,
சென்னை.

# சென்னை தியாகராஜ மண்டபத்தில் தென்னிந்திய நலவுரிமைச்சங்க நிர்வாக கூட்டத்தின் நடவடிக்கை.

மதுரை ஸ்ரீமான் P.T. ராஜன் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் சுமார் 30 கனவான்கள் விஜயம் செய்திருந்தவர்களுள் முக்கியமானவர்கள்.

ஸ்ரீமான்கள் சர் ஏ.பி. பாத்ரோ, மீர்சாபூர்ராஜா குண்டூர் எத்திராஜுலு நாயுடு, சி.எஸ். இரத்தின சபாபதி முதலியார், எம். கிருஷ்ணன் நாயர், குமாரசாமி செட்டியார், தணிகாசலம் செட்டியார், ஆரியா, சிதம்பரநாத முதலியார், ஏ.ராமசாமிமுதலியார், எம். டி. சுப்பிரமணிய முதலியார், பி. வரதராஜுலு நாயுடு அப்துல்ராஜாக் சாயபு, மொய்டுசாயபு, அற்புதசாமி உடையார் T. S. முத்துக்குமாரசாமி முதலியார், கே. வி. மேனன் ஜே. எஸ். கண்ணப்பர், எஸ். எஸ். ஆநந்தம் முதலியவர்கள் வந்திருந்தார்கள். சங்கத் தலைவராக பணகால் ராஜா அவர்களும் உபதலைவர்களாக அதாவது சென்னை மாகாணத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்து தமிழ்நாடு, ஆந்திரநாடு, கேரளநாடு, சென்னை ஆகிய நான்கிற்கும் நான்கு உபதலைவர்களும் இதுதவிர மகமதியர்கள் கிருஸ்தவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிய மூன்று சமூகத்திற்கு மூன்று உபதலைவர்களும் ஆக ஏழு பேர்கள் இருக்கவேண்டுமென்று முதலில் தீர்மானிக்கப்பட்டு அந்தப்பிரகாரமே தமிழ்நாட்டுக்கு ஸ்ரீமான் எம். டி. சுப்பிரமணிய முதலியாரும் ஆந்திர நாட்டுக்கு ஸ்ரீமான் மீர்சாபுரம் ராஜா அவர்களும், கேரள நாட்டுக்கு திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்களும், சென்னைக்கு திவான்பகதூர் தணிகாசலம் செட்டியாரவர்களும், மகமதிய சமூகத்திற்கு சைதாப்பேட்டை கான்பகதூர் அப்துல்ரஜாக் சாயபு அவர்களும், கிறிஸ்தவ சமூகத்திற்கு ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்களும் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு பாவ்பகதூர் மதுரை பிள்ளை அவர்களுமாக ஏழு உபதலைவர்கள் தெரிந்தெடுக்கப்பெற்றனர். காரியதரிசியாக ஸ்ரீமான் பி. டி. குமாரசாமி செட்டியாரவர்கள்தெரிந்தெடுக்கப்பட்டனர் பிறகு சென்னை மாகாண முழுவதற்குமாக ஒரு அமைப்புத் தலைவரைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று அக்கிராசனாதிபதி சொன்னார். சொன்னவுடன் பல கனவான்கள் ஒன்றுய்ச் சேர்ந்து எழுந்து ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் பெயரை பிரேரேபித்தார்கள். ஸ்ரீமான் நாயக்கர் எழுந்து, தான் இன்னமும் தென் இந்திய நலவுரிமைச் சங்கத்திற் சேரவே இல்லையென்றும் பார்ப்பனரல்லாதார் நாம் என்கிற முறையில் கொஞ்சம் கூட பாக்கிவைத்துக்கொள்ளாமல் எல்லோருடனும் தாராளமாய் ஒத்துழைக்கத் தயாராயிருப்பதாகவும், ஆதலால் அந்த ஸ்தானத்திற்கு வேறு கனவானைத் தெரிந்து எடுக்கும்படியாகவும் வேண்டிக்கொண்டார். உடனே அக்கிராசனாதிபதிகளில் சில கனவான்கள் எழுந்து ஸ்ரீமான் நாயக்கர் தலைமைஅமைப்பாளர் வேலையை ஒப்புக்கொள்ளாவிட்டால் தாங்களும் தங்கள் ஸ்தாபனங்கோ விட்டு விலகிக்கொள்வதாகவும், அவர்கள் இருக்கிறார்கள் என்கிற எண்ணத்தின் பேரிலேயே தாங்கள் பொறுப்புகோ ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்துக்கொண்டார்கள். பிறகுஎல்லோருமாகஸ்ரீமான்நாயக்கரை ஏற்றுக்கொள்ளும்படியாக வற்புறுத்தவும் நாயக்கர் எழுந்து தனக்கு இச்சங்கத்திற் சேருவதில் யாதொரு ஆசேஷபணையுமில்லை என்றும் தான் எடுத்துக்கொண்டிருக்கும் கொள்கையும் வேலையும் எந்தச்சமயம்வேண்டுமானலும் சத்தியாக்கிரகம் செய்யவோ சட்டங்களைமீறவோஜெயிலுக்குப்போகவோ நேரிடச்செய்யுமென்றும், அன்றியும் மகாத்மா தமிழ்நாட்டு நிலையை அறிந்து ஒற்றுமைக்கு மார்க்கம்செய்துவிட்டு மறுபடியும்சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் முதலிய காரியங்களில் தலையிடுவாரானல் தானும் உடனே போய்விடவேண்டி இருக்குமென்றும், அப்போப்பட்ட காலங்களில் இச்சங்கத்திட்டங்களை மீறினதாக தங்களால் கருதக்கூடும் என்றும் சொல்லிக்கொண்டபோது, சில கனவான்கள் அப்போப்பட்ட உண்மையான சமயங்கள் வரும்போது தங்களிலும் பலர் வரச்கூடுமென்றும், தாங்கள் அதற்கு பின்வாங்கினவர்கள் அல்லவென்றும்அதைப் பற்றி பயமில்லை என்றும் ஆனல் அது பயனளிக்கத்தக்க முறையில் நடத்தப்பட வேண்டும் என்றும் சொல்லி அவசியம் அமைப்புபொறுப்பை ஒப்புக்கொள்ளத் தான்வேண்டுமென்று சொன்னதின்பேரில் மற்றும் இரண்டொரு நபர்களைக் கேட்டு அவர்களுடைய ஒத்துழைப்பையும்பெற்றுக் கொண்டு தான் முடிவு சொல்லுவதாய்ச் சொல்லிக்கொண்டார். அதற்கு சபையோர்கள் அதை ஒப்புகொண்டு "ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் தலைமை அமைப்பாளராக (சீப் ஆர்கனைசர்) இருக்கவேண்டுமென்று இச்சங்கம் அவரை கேட்டுக்கொள்ளுகிறது" என்பதாய் தீர்மானித்தார்கள். உதவி அமைப்புத் தலைவர்களாக ஐந்து கனவான்களை நியமிப்பது என்றும் அவர்களை தலைமை அமைப்புக் கர்த்தாவையும் உபதலைவர்களையும் கலந்து தலைவர் நியமிக்க வேண்டியது என்றும் தலைவரால் நியமிக்கப்பட்டவர்களை இச்சபை தெரிந்தெடுத்ததாய் பாவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## மகாத்மாவின் தென்னாட்டு விஜயம்.

பிறகு மகாத்மா தென்னாட்டு விஜயத்தின்போதும் மகாத்மாவின் கதர் திட்டத்தைப்பற்றியும் இச்சங்கத்தார் நடந்துகொள்ளவேண்டிய விஷயத்தைப்பற்றி நீண்ட நேரம் விவாதம் நடந்தது. மகாத்மாவை வரவேற்கவேண்டியதுதான் என்றும் கதர்த் திட்டத்தை ஆதரிக்க வேண்டியதுதான் என்றும் இவற்றைத்தாங்கள் மனப்பூர்வமாய் ஆதரிப்பதாகவும், ஆனல் நமது நாட்டுப் பார்ப்பனர்களில் சிலர் தாங்கள் இழந்து விட்ட செல்வாக்கை மறுபடியும் பெறுகிறதற்காக மகாத்மாவைக் கூட்டிவந்து ஆட்டிவைக்கப் போகிறார்களே தவிர மற்றபடி இதுசமயம் மகாத்மா வாயுக்கு எவ்வித அவசியமும் அவர்களாலேயே குறிக்கப்படவில்லை என்றும், கதருக்காக வருகிறார் என்பதாய் வைத்துக்கொண்டாலும் மோக்ஷம் சுயராஜ்யம் என்கிற பெயரால் எப்படி பார்ப்பனர்கள் நம்மை ஏமாற்றி இழிவுபடுத்தி தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும் ஆதிக்கத்திற்கும் வழி தேடிக்கொண்டார்களோ அதுபோலவே ஏழைகளுக்கு ஜீவன மார்க்கம் என்கிற பெயரால் கதரைச் சொல்லிக்கொண்டு சில பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்பும் ஆதிக்கமும் தேடச்செய்யப்படும் சூழ்ச்சியாய் இருக்கிறதென்றும், அதற்கு உதாரணமாக மகாத்மாவுக்கு பண்டு சேர்க்கவும் வரவேற்கவும் ஆங்காங்கு இப்போது ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் அவர்களால் ஸ்ரீமான் சங்கர்லால் பாங்கரைக் காட்டி கூட்டம் கூட்டி ஏற்படுத்தப்படும் கமிட்டிகள் எல்லாம் அநேகமாய்ப் பார்ப்பன மயமாகவே இருக்கின்றனவென்றும் மகாத்மா வைகதர்பெயரைச்சொல்லி தமிழ்நாட்டுக்கு அழைத்துவந்து, கடைசியாய் சுயராஜ்யக் கட்சிக்கு யோக்கியதை சம்பாதித்துக் கொள்ள சில பார்ப்பனர்கள் கதரின் பெயரால் லஞ்சம் கொடுக்கக்கூட காத்திருக்கிறார்கள் என்றும் இந்தவிஷயத்தில் நாம்மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும் என்றும் இரண்டு மூன்று உபதலைவர்கள் பேசினார்கள். மற்றொரு கனவான் எழுந்து நாம் இதில் கலந்துகொள்ளாவிட்டால் இந்தப் பார்ப்பனர்கள் நாம் மகாத்மாவுக்கும் கதருக்கும்கூட எதிரிகளாயிருக்கிறோம் என்று மகாத்மாவிடம் சாடி சொல்லுவார்களென்றும், ஆதலால் நாமும் கலந்தது போலாவது காட்டிக்கொள்ளவேண்டுமென்று சொன்னார். மற்றொரு கனவான் கொஞ்சம் கோபத்தோடு மகாத்மாவிடம் பார்ப்பனர்கள் சாடி சொல்லிவிடுவார்கள் என்பதற்காக பயந்துகொண்டு தற்கொலை புரிந்துகொள்ளுவதா என்றும், இப்பொழுது மாத்திரம் இந்தப் பார்ப்பனர்கள் நம்மைப்பற்றி நன்மையாய்த்தான்சொல்லிஇருக்கிறார்களா என்றும், நம்முடைய இவ்வளவு பெரிய இயக்கத்தைப்பற்றியும் நமது கோரிக்கைகளைப்பற்றியும் ஒரு வார்த்தையாவது மகாத்மா எழுதியிருக்கிறாரா? நம் மதுரை மகாநாட்டைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லி இருக்கிறாரா? என்றும், ஆதலால் இதற்காக நாம் பயப்படவேண்டியதில்லை என்றும், நம்முடைய கடமையைச் செய்வதில் நாம் ஒழுங்காய் நடந்துகொண்டோமா என்றுதான் பார்க்கவேண்டுமே அல்லாமல் இந்த

பூச்சாண்டிக்கு பயப்படக்கூடாது என்றும் சொன்னார். மற்றொரு கனவான் கதர் விஷயத்தில் நாம் எதாவது செய்யவேண்டியது அவசியம் என்றும், ஆனால் நாம் பணம்வசூல் செய்து அவர்களிடம் கொடுத்துவிட்டுப் பார்ப்பனர்கள் தயவை எதிர்பார்த்துக் கொண்டு நிரியக்கூடாது என்றும், இப்போதே கதர் போர்டு என்பது பார்ப்பன அக்கிரஹாரமாய்த்தான் இருக்கிறதென்றும் பார்ப்பனரல்லாதார் ஒன்று இரண்டு பேர் அதில் இருப்பதாக நமக்குத் தெரிந்தாலும் அவர்கள் பார்ப்பனர்கள் தயவில் அங்கு வாழக்கூடியவர்களாயிருப்பவர்களே அல்லாமல் சுதந்திரமாய் இருக்கமுடியாதென்றும், சில கதர்கடை மானேஜர்கள் என்பவர்களோ விற்பனைக்காரர்கள் என்பவர்களோ மதுரைத் தீர்மானத்திற்குப் பிறகு பார்ப்பனரல்லாதார்களில் சிலர் கதர் வாங்கப்போனால் பரிகாசம் செய்கிறார்கள் என்றும் கதரின் பேரால் வயிறு வளர்ப்பதற்காக பார்ப்பனர்கள் திருப்தியாகும்படி நம்மை வாய்கொண்டு மட்டும் வைகிறார்கள் என்றும், அவர்களிடம் போய் கதர் வாங்குவதனாலேயே மனதிற்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறதென்றும், அவர்கள் நம்மைச்சரியானபடி நடத்துவதில்லை என்றும் நமது கன்மையையும் சுயமரியாதையையும் உத்தேசித்து காமும் ஒரு கதர்இலாக்கா ஆரம்பித்து ஜனங்களுக்கு நல்ல கதர் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும், இக்கஷ்டங்களை மகாத்மாவிடம் சொல்லி இதற்கு மகாத்மாவின் உதவி பெறவேண்டும் என்றும், முடியாவிட்டால் நாமே ஆங்காங்கு சொந்தத்தில் கடைவைக்கவேண்டும் என்றும், கதர் இலாக்கா எந்த விதத்திலும் அரசியலில் தலையக்கூடாதென்றும், கதரின் பேரால் நம்மிடம் பணம் வாங்கி கதர் விற்பனை ஆட்கள் கதர் நிர்வாக அட்டகாசம் என்று பெயர் வைத்துக்கொண்டு நம்மை திட்டவும் நமது எதிரிகளுக்குத் தொண்டுசெய்யவும் உதவும்படி செய்யக்கூடாதுஎன்றும்பேசினார். கடைசியாக ஒரு கனவான் எழுந்து இது விஷயத்தில் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் அபிப்பிராயம் தெரியலாம் என்று சொன்னார். உடனே அக்ராசனர் இச்சங்கடமான காரியத்தில் அவரை தொந்திரவு செய்யக் கூடாதென்றும் நமது முடிவு இன்னது என்று எற்படுத்திக்கொண்டால் பிறகு அவரைக்கேட்கலாம் என்று சொன்னார். உடனே மற்றொரு கனவான் எழுந்து மகாத்மாவை சபர்மதிக்குப்போய் நேரே கண்டு கேட்கலாமென்றும், மற்றொருவர் இவ்விருந்து கடிதமூலமாய் மகாத்மாவின் தென்னாட்டு விஜயத்தின் கருத்து என்ன என்றுகேட்கலாம் என்றும், அரசியலானால் நாம் அதில் கண்டிப்பாய் கலக்கூடாதென்றும் தனியாக கதர் தின்டாமை மாத்திரமானால் நாமும் கலந்து கொள்ளலாம் என்றும், எப்படியானாலும் அவர் இங்கு வரும்போது நமது குறைகளையும் நமது நிலைமைகளையும் பார்ப்பனர்கள் அக்கிரமங்களையும் அவரிடம் உபசாரப்பத்திரமூலமாகவோ பேட்டி காணுவதன் மூலமாகவோ தெரிவித்து விடலாம் என்றும் சொன்னார். கடைசியாக பணம் கல் ராஜா டில்லியில் இருந்து வந்த பிறகு நாயக்கர் உள்பட சில முக்கியஸ்தர்கள் கலந்து வேண்டியது செய்யலாமென்கிற முடிவுக்கு வந்தார்கள்.

இந்தக் கூட்டம் இவ்வளவுடன் முடிவடைந்ததும் ஜஸ்டிஸ் கட்சிசட்ட சபை மெம்பர்கள் கூட்டம் ஒன்று நடந்தது. அக்கூட்டத்தில் சட்டசபை மெம்பர்கள் மாத்திரம் கலந்து கொண்டார்கள்.

## திருவாளர் A. ரெங்கசாமி அய்யங்கார் அவர்களுக்கு பகிரங்கக் கடிதம்.

ஐயா!

தாங்கள் சுதேசமித்திரன் ஆசிரியராகவும் இந்திய சட்டசபையின் உறுப்பினராகவும், அகில இந்தியாக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகவும், ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்கார் ஆகவும் இருந்து இந்திய நாட்டிற்கு உழைத்துவருவதைப்பற்றி எதிர்கட்சியினர்களால் பல வதந்திகள் கூறப்பட்டு வந்தன என்பதை நாமறிவோம். அத்தகைய வதந்திகள் சுத்தமோசடியானதென்றும் தங்கள் கௌரவத்தைக் குறைக்கவே பொய்யாகக் குறை கூறப்படுவது என்றும் தங்கள் பத்திரிகையில் அடிக்கடி கூறப்பட்டு வருவதைக் கண்டு உண்மை இன்னதெனப் புலப்படாமையால் மிகப்பொறுமையுடனிருந்து வந்தோம். ஆனால் சமீபகாலத்தில் தங்களுடைய செய்கைகளிலிருந்து பல ஐயப்பாடுகள் தோன்றிவருவதால் காங்கிரஸ் கமிட்டி க்காரியதரிசி என்ற முறையிலோ அல்லது பொறுப்புவாய்ந்த ஒரு பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையிலோ, அல்லது சிறந்த தேசாபிமானி என்ற முறையிலோ தாங்கள் கீழ்க்கண்ட கேள்விகளுக்குத்தகுந்த விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள்.

1. குடியை நிறுத்தப் பிரசாரம் செய்துகொண்டு "சைமன் சாராயத்தை எல்லோரும் சாப்பிடுங்கள், ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டும்" என்ற விளம்பரத்தையும் தங்களுடைய பத்திரிகையிலேயே பெரிய பிராந்திப் புட்டிப்படத்துடன் விளம்பரப்படுத்திப் பணம் சம்பாதிப்பது ஒழுங்கான தொழிலா? அல்லது சிறந்த தேசாபிமானிகளின் செய்கையைத்தான் குறிக்கிறதா? இது விஷயமாகக் குடியரசு திராவிடன் முதலிய பத்திரிகைகள் இடி முழக்கம் போன்று இடித்து இடித்துக் கூறியும் தாங்கள் ஏதும் கூறாமலும், தங்கள் வழக்கத்தை நிறுத்தாமலும் இருப்பது சிறந்த தேசாபிமானச் செய்கையா? இம்மாதிரி சொல்லொன்றும் செயலொன்றுமாக இருப்பதுடன் ஏதேனும் கேள்வி கேட்டால் மௌனம் சாதிப்பதுதான் காங்கிரஸ் காரியதரிசியின் முக்கிய கொள்கையா?

2. $31\frac{1}{2}$ கோடி மக்களின் பிரதிநிதியாக ஆஸ்திரேலியாவில் நடந்த ஏகாதிபத்ய மஹா நாட்டிற்குச் சென்று இந்திய மக்களின் குறையை எடுத்துக் கூறி சமத்துவப் போராட்டம் நடத்திய திருவாளர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரைப் பற்றி ஒன்றுமே தெரியாத தங்களுக்குச்சிலோன் சட்டசபையில் யாரோ ஹேடேசய்யர் என்ற ஒருவருடைய தீர்மானத்தைப் பற்றி எடிட்டோரியல் கலத்தில் பத்தி பத்தியாய் எழுத எவ்வாறு தெரிந்தது? மற்ற அய்யர்களுக்குத் தங்கள்பேனா முனையினின்று புறப்படுகிறபொது ஜன அபிப்பிராயமும் பேட்டிகண்ட விவரமும், டீபார்ட்டிகளும், பிரசங்கங்களும், அதன் சாரங்களும், வரவேற்புகளும், வானபளாவிய புகழ்ச்சிகளும் திரு செட்டியார் அவர்கள் விஷயத்தில் மௌனம் சாதித்த காரணம் என்ன? சிலர் கூறுகிறபடி திரு செட்டியார் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவராயிருந்திருந்தால் சில தொண்டிச்சாக்கு கூறிக்கூறி அவருடைய ஆஸ்திரேலியா பிரசங்கங்களைப்பற்றிக் கண்டித்திருப்பீர்கள் என்பது உண்மையா? அல்லவா?

3. தங்கள் பத்திரிகையில் சில உத்தியோகஸ்தர்களைக் கண்டித்தும், சில உத்தியோகஸ்தர்களைப் புகழ்ந்தும் வருவதில் கண்டிக்கப்படுகிறவர்களெல்லாம் பிராமணரல்லாதார் என்றும் புகழப்படுபவர்களெல்லாம் பிராமணர்கள் என்றும்,கூறப்படுவது உண்மையா? அல்லவா?பார்ப்பனர்கட்சிக்குஆதரவாயிருக்கும் சேர்மென் முதலியவர்களுடைய குறைகளைப்பற்றி எழுதினால் அத்தகைய நிருபங்களைப் பத்திரிகையில் பிரசுரிக்காமல் குப்பைக் தொட்டியில் போடுவதும், எதிர்க்கட்சிசேர்மென்கள் அக்கிரஹாரத்திற்குத் தண்ணீர் விடுவதில்லை யென்பதைப்போன்ற பொய் விஷயங்களைப் பிரசுரிப்பதில் தாங்கள் முதன்மையாயிருப்பதும் உண்மையா? அல்லவா?

4. சென்ற சுடவைகளில் திருச்சி, தஞ்சை தொகுதியில் இந்தியா சபைக்கு அபேக்ஷகராக இருந்த தாங்கள் இந்தத்தேர்தலிலும் அந்தப் பதவியைத் தாங்களே அடைவதற்குப் போட்டியாக வந்த சிலரை கெஞ்சிக்கேட்டு இப்பதவியைத்தாங்கள் சாசுவதப்பதவியாகக்கொள்ளையடித்த அறிவு என்கல்கத்தா டிப்டிமேயர் விஷயத்தில் மாறிப்போயிற்று? அவரைப்பற்றிச்சாசுவத பதவியா? என்று மொச்சைக்கொட்டை எழுத்தில் தலையங்கமிட்டு கண்டிக்க வந்த தங்களுடையசெய்கை அயோக்யத்தனத்தைக்காட்டுகிறதா? அல்லவா?

5. தமிழ்ச் சங்கங்கள், சைவசித்தாந்த சபைகள், அரிய தமிழ்ப்புலவர்களின் சொற்பொழிவுகள் முதலியவைகளைத் தங்களுக்கு வரைந்தனுப்பினால் பத்திரிகையில் இடமில்லை யென்று குப்பைத்தொட்டியில் கிழித்துப்போடுகிற தங்களுக்கு தமிழ் மொழிக்கே கேட்டை விளைவிக்கும் பார்ப்பனர்களுடைய தமிழ் பிரசங்கங்களையும், லேடி சதாசிவய்யர் வீட்டில் நடந்த கோலாட்டத்தையும் பத்தி பத்தியாய் பிரசுரிக்க இடம் எங்கிருந்து கிடைக்கின்றது.

தயவு செய்து இப்போது இந்த 5கேள்விகளுக்கு மட்டும் பதில் எழுதுங்கள். தங்களுடைய பதிலைக்கொண்டு பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்ற வகுப்பு வித்தியாசமில்லாதவரும் சிறந்த தேசாபிமானியும், எல்லோருக்கும் சமத்வம் வழங்கும் காங்கிரஸ் கட்சியின் காரியதரிசியுமாகிய தங்களுடைய நியாக புத்தியை அறிந்தும், சிலர் கூறுவதுபோல சுதேசமித்திரன் பார்ப்பன மித்திரன் அல்லவென்பதையறிந்தும் தங்கள் மீதும் அளவு கடந்த அன்பைச்செலுத்தி ஆதரிக்க பொது ஜனங்கள் மிக்க ஆவலுடன் காத்திருக்கின்றனர். பதில் அளிப்பீர்களாக!

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
மணிவாசகத் தமிழகம், திருச்சிராப்பள்ளி.

## பிராமணரல்லாதார் கட்சி வகுப்புத் துவேஷமுடையது என்பது சரியா? தப்பா?.

(கைவல்லிய சாமியார் எழுதுவது)

எந்தவித காரணத்தை முன்னிட்டும் விவகாரத்தில் பற்று வைக்காமல் இருகட்சியின் ஞாயத்தையும் கேட்டு ஞாயத்தை வழங்கும் நியாயாதிபதி போல இந்த வியாசத்தை நீங்களெல்லோரும் படிக்கவேண்டும். புத்தியை உடைய தந்திரி முடிச்சுப்போடுமிடம் தெரியாமல் அவனை நம்புகிறவர்களும், தெரிந்தாலும் சொற்பலாபத்திற்கு எங்குந் திரிகிறவர்களும், தங்களில் முன்பின் காரியாகாரியங்களையும் பேச்சுகளையும் எழுத்துக்களையும் மறந்து பேசித்திரிகிறவர்களும், பதவி வந்தவுடன் "மற்றவர்கள்பகை நமக்கேன்" என்றுதந்திரம்போகப் பேசுகிறவர்களும், அரைவயிறு நிறைந்த கோழைகளின் தந்திர சமாதான தந்திரப்பேச்சுடையவர்களும், குருக்களில்லாமல் குலதெய்வம் கோபித்துக்கொள்ளுமென்னும்கூட்டத்தார்களும், இதன் உண்மைகளைத்தெரிந்தாலும் ஆசையும் பயமும் சுயநலமும் இவர்களை நிலையுறச்செய்வதில்லை.

"வகுப்புத்துவேஷத்தைஉண்டாக்குகிறார்கள்" "அது வளர்த்துவிட்டது" "அதை வெட்டிப்புதைத்தாய்விட்டது," என்று பார்ப்பன பத்திரிகைகளெலலாமெழுதுகின்றன? வகுப்புத் துவேஷமென்பது என்ன? எப்படி வந்தது? வருவானேன்? என்பதைப் பொதுஜனங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். துவேஷமென்னும் பதம் கேட்டமாத்திரத்தில் வெறுப்பு என்னும் தப்பான அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதே. வெறுப்புக்கொடுப்பதற்கும் காரண்ம்வேண்டும். அந்த வெறுப்பு சரியா? தப்பா? வென்பதை நாம் இப்பொழுது தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம். புராதனமாக நம் தேசத்தில் ஸ்மிருதியால் தொழில்கள் வரம்புகடவாமல் நிறுத்தப்பட்டன. அவை முதலாவது ஜனங்களின் பொதுத் தேவைகளாகவும் பிறகு அவரவருக்கு ஜீவனோபாயங்களாகவும் கருதப்பட்டன; எனவே அப்பொழுது எல்லையில்லாத போட்டியின்தூண்டுதலுக்குட்படாமல் தனித்தனி பரிபூரணத்தன்மையை பயிற்சி செய்துவந்தது இப்பொழுது எப்படியிருக்கிறது? நமது ஜாதிக்கட்டின் விதிகள் நம்மால் பொறுக்க முடியாதபடி பாரமாகிவிட்டன என்பது தெரிந்தும் தெரியாமலும் ஒவ்வொருவர் மனதையும் துளைக்கிறது. பிராமணன் தகுதியேவாங்கிக்கொள்ளுகிறான். படிப்பு கற்றுக்கொடுப்பதை விட்டுவிட்டான். ஜெமின்தார் குடித்தனக்காரரை கசக்கிப்பிழிகின்றார் பிரதி உபகாரம் கிடையாது. மேற்குலத்தார் பொது ஜனங்களின் மதிப்பை வேண்டுகின்றனர். அதற்கு கைமாறுகாப்பில்லை, நமது சடங்குகள் வீண்செலவு மிகுந்தும் சிதேகித வழிகுறைந்தும் வேஷமாத்திரமாயின. இடையே ஜாதி முட்டுதல் பல. குருக்களின் கொள்கை தீவிரம்; மேல்ஜாதிப் பசுவிற்கு நாம் தீவனம் போடுகிறோம் அது நமக்குப் பால் கொடுப்பதை நிறுத்தி முட்டுவதைநிறுத்துவதில்லை மனிதர்கள் மரம் கல்லாகவிருந்தால் அடக்கிவைப்பதே சிறந்த தொழில். ஆனால் மனிதர், ஜீவஜந்துக்கள். உயிரும் விருத்தியும் முன்னேற்றமும் நாடுவோர், குருட்டு நம்பிக்கையான எல்லைக்குள் புத்தியைக்கட்டுப்படுத்தி இருப்போர் அங்ஙனமில்லாமல் பெரிய ராஜ்ய சிந்தனையும் அதற்குத் தக்க செய்கையும் பெற்று அவனுடைய யோசனைகளும் சக்திகளும் ஆசைகளும் முயற்சிகளும் செய்கையில் வரும்போது அதற்கு எதிரிடையாயிருப்பவர்களைக் குற்றம் சொல்லவேண்டியிருக்கிறது. அப்பொழுது குற்றஞ்சொல்லுகிறவர்களை குற்றத்திற்கு காரணமாயிருந்தவர்கள் தங்கள் சொந்த லாபத்தை நிலை நிறுத்த வகுப்புத்துவேஷிகள் வகுப்பு வாதக்காரர்கள் என்னும் பழியைச் சுமத்துகிறார்கள். ராஜாங்கத்தின் பேராலோ மதத்தின் பேராலோ அறிவைக்கெடுத்து அடக்கிவைத்திருப்பதற்குக் கொடுமையென்று பெயர். அக்கொடுமையைத் தொலைக்கப் பிரயத்தனப்படும் கூட்டத்தார்களை ராஜத்துவேஷிகள் வகுப்புத்துவேஷிகள் என்பதில் ஞாயமிருக்கிறதா? என்பதை கவனியுங்கள்.

"இடருதல்களை மாத்திரம் கருதி எங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கலாகாது. எங்கள் பூர்வீக சொந்த தேசத்தின் சுதந்தரங்களை எங்களுக்குக் கொடுத்துவிடுங்கள்." என்று ராஜாங்கத்தாரிடம சோர்வில்லாமல் மீட்டுமீட்டும் சொல்லித் தொல்லைப்படுத்திஎல் அதிகாரிகள்சிறையிலிடுகிறார்கள். இதேமாதிரி ஜமாப்புதாரிகளான புரோகிதர்களை "ஐயரே! இது கலியுகமென்றும் மனிதனுடைய எளிய புத்தியை சுயேச்சைப்படி விட்டால் கெட்டுப்போகுமென்றும் ஆதலால் மூளையை உழைப்பிலும் தலை சாஸ்திரங்களிலும் வணங்குதலே சிறந்த தென்று சொல்லுகிறீர்களே, இந்த அவமான வார்த்தைக்கு நாங்கள் அடங்கமாட்டோம்" என்று சொன்னால் அவர்கள் கண் சிவந்துபோய் அவர்கள் கூட்டமே ஒன்று சேர்ந்து "கடவுளே இல்லை என்பவன் பிராமணதுவேஷி சாஸ்திரத்தைக் குற்றம் சொல்லுகிறவன் வகுப்புத்துவேஷத்தை உண்டுபண்ணுகிறவன் இவனை ஜாதியைவிட்டுத்தள்ளிவிடவேண்டு"மென்கிறான். ராஜாங்கத்தார் மிதவாதிகளென்று சிலரைப்பிடித்து நம் கையாலே நம் கண்ணைக்குத்துவதுபோல் நம்மில் படித்தும் ஆலோசனையில்லாதவர்களையும் அற்பகாரியத்திற்கு எங்கித் திரிகிறவர்களையும்; சேர்த்து அவர்களோக்கொண்டே நம்மை இந்த ஸ்திதியைவிட்டு அகலாமல் செய்யப் பிரயத்தனப்படுகிறார்கள். பலவான் பலவீனனையும், புத்திமான் புத்தியிலாதவனையும், செல்வவான் ஏழைகளையும், அடக்கித்தங்கள் காரியத்திற்கு உபயோகித்துக்கொள்ளுவது உலகின் இயல்பு. ஏழை தன் உழைப்பால் சேர்த்தின சிறு தொகைக்கு ஒருபூமி வாங்கினால் பக்கத்துப்பூமிக்காரனை பணக்காரனுக்கு வந்துவிடும் கோபம். புத்தியில்லாதவன் கொஞ்சம் புத்திகற்று இவனும் ஒரு கலிபாடிஎல்வந்துவிட்டது ஆக்ரோஷம் பழையவித்துவானு! க்குஆயிரம் குற்றம் அவன்பாட்டிற்கு! அடிபட்டவனை அடிபொறுக்காமல், "நானும் மனிதன்தான். இதுவரையிலுமடித்ததுபோல் இனி அடித்தால் தெரியும்" என்று சொன்னலோ வந்தது பலசாலிக்கு அகங்காரம்! இதுவும் உலகத்தில் சகஜம். இந்த இடத்தில் வந்துவிடுகிறது வகுப்புத்துவேஷம் எங்கிருந்து துவேஷம் புறப்படுகிறதென்பது இக்கொரு மறைபு. பணம் சம்பாதிக்கும் எழைகளுக்கு இடையூறுசெய்யாத பணக்காரனும் புத்தியில்லாதவர்கள் புத்தியை விர்த்திசெய்யும் விஷயத்தில் தடைசெய்யா புத்திசாலியும், பலவீனம் பலம் உண்டாக்கிக்கொள்ளுவதில் பலசாலி ஒத்தாசையுமிருந்தால்லல்லவா துவேஷங்கள் ஒழியும்? தொழிலாளி தன் தேக உழைப்பின் அதிகத்தாலும் கூலியின் குறைவாலும் தனக்குண்டாகும் சிரமத்தின் உணர்வால் முதலாளிகளின் கொடுமைகளை உணர்கிறார்கள். பலவீனர்கள் பலவானின் காலின் கீழ் மிதியுண்டு நசுங்கும் நசுக்குதலால் பலவானின் அக்கிரமத்தைத் தெரிகிறார்கள். நம்பிக்கையுடைய புத்தியிலாதவனுக்கு உண்டாகும் காரியக்கெடுதலும் லாபக்குறைவும் துன்பப்படுத்துகையில் புத்திசாலியின் தந்திரத்தையும் கட்டுப்பாட்டையும் இதற்குச்செய்த புரட்டையும் தெரிந்துகொள்ளுகிறான். இங்கிருந்து குற்றமும் விவகாரமும ஆரம்பிக்கப்படுகின்றன. இதற்காக நாக்கு மூக்கு அறுப்பதும் ஈயத்தைக்காய்ச்சி ஊற்றுவதும் தலையை வெட்டுவதும் இந்தக்காலத்துச் சட்டத்தில்லை. தங்கள் கொடுமைகளிலிருந்தும் தன்பங்களிலிருந்தும் வெளிவருகிறவர்கள் செய்யும் காரியங்களையெல்லாம் வகுப்புத்துவேஷமென்று கூறுகிறார்கள். அவர்சொல்லியே தீருவார்கள் இதைவிட வேறு ஆயுதம் இந்தக்காலத்தில் உபயோகப்படாது. தனக்கும் தன் கூட்டத்தாருக்கும் வரும் கெடுதலை உணராமல் அற்பலாபத்திற்காக வைதருக்கும் லாட்டு வோவிற்கும், கூலிக்குப் போன பாம்பரை நம் தேசத்திலில்லாமலில்லை.

பிராமணரையும் ராஜாங்கத்தாரையும் குற்றஞ் சொல்லுவது தற்புகழ்ச்சிக்கன்று; பிறரைத்துன் புறுத்தவன்று; பிறர்செல்வத்தையபகரிக்கவன்று ஒருகூட்டத்தாரை தொலைத்துவிட பெருமடங்கான சக்தி ஸம்பாதிக்க வேண்டுமென்கிற நோக்கத்தாலன்று தேசப்பொறுப்புகளை வகிக்கும் இயற்கை உரிமையில்லாமையாலும், முழுப்பயன் கேடாகிய இகழ்ச்சியின் துன்பங்கள் நம்நெஞ்சை தின்னுகின்றபடியாலுமே. சத்தியமும், தானமும், த்ரோக மின்மையும், க்ரூரமின்மையும், பொறுமையும், தயையும், தவமும், எவனிடம் காணப்படுகின்றனவோ அவன் பிராமணன். மைதனஇச்சையும் புத்திரோற்பத்திக்காகவிரும்பு என்னும் விதிப்பிரகாரம் ஒரு புத்திரனைப் பெற்று மற்றவர்கட்கு வித்தை போதிக்கும் தொழிலும ஜீவனோபாயத்திற்கு உபாதானமெடுப்பதை விட்டு விட்டு அநேகம் பெண்ஜாதியைக் கொன்று ஐம்பது வயதாலும் பத்து வயதுப் பெண்ணை விவாஹம் செய்து அநேக குழந்தைகளைப்பெற்று தோட்டி முதல் தொண்டமான் வரையிலுள்ள எல்லா விதத்தொழில்களையும் ஆக்ரமித்து உலகத்திலுள்ள எல்லாவித போகபோக்கியங்களையும் அனுபவிக்கும் எண்ணத்தால் தன்னை இழிவு படுத்திக்கொண்டு தான் பிராமணன் என்னும் ஆணவத்தை விடாமல் எல்லோரையும் இனியும் அடிமைப்படுத்திப் பாதகாணிக்கைவாங்கச் செய்யும் பிரயத்தனத்தில் யாருக்குத்தான் துவேஷமுண்டாகாது? "பார்ப்பான் படித்தான் உத்தியோகத்தை அடைந்தான்" என்பது எல்லோருக்கும் தெரியும். அதுபோல் படித்தவர்களும் சர்க்கார் கொடுக்கும் பிச்சையைப் பங்கிட்டுக்கொள்ளுவோம் என்கிறார்கள். இது வகுப்புத்துவேஷமா? ஒவ்வொரு அம்சத்திலும் குரூரமான கொடுக்கேன்மை நிறைந்திருக்கிறது. மதத்தின் பேராலும், சாஸ்திரத்தின் பேராலும், அடிமைப்படுத்திவைத்திருப்பதை ஒழித்தாலொழிய ராஜாங்கத்தில் கூசாமல் பரிபூரண விடுதலை கேட்பது மிகுந்த வியப்பிற்கிடமாகிறது என்று ஸ்ரீமான் நாயக்கரும் "குடியரசு"ம் சொல்லுகிறார்கள். இது ஜாதித்துவேஷமா? வகுப்புவாதமா? அதிகாரிவர்க்கத்தாரைக் குறை கூறும் சபைகளும், தலைவர்களும்ராஜீயத்துவேஷிகளா? வகுப்புத்துவேஷிகளா "தயையிலாப்படிப்பும், பக்தி, ஒழுக்கம், மூன்றுமில்லாத கோவில் குருக்களுடைய காலில் பணத்தைக்கொட்டும் மூடர்களே!" என்று ரவீந்திரநாத தாகூர், "மார்டன் ரிவ்யூ" என்னும் பேப்பரில் எழுதியிருக்கிறார். இவர் எந்த துவேஷி? உலகமெலாம் புகழ்பெற்ற பிராம்மணன், உயர்ந்த ஜாதியார் தாழ்ந்த ஜாதியாருக்கு ஒன்றும் கற்பியாமல் தாங்கள் மாத்திரம் கல்விகற்று தங்கள் வீடுகளை ஒழுங்குபண்ணிக்கொள்வதற்கும், அயல்காட்டாரான ஐரோப்பியர் முன் தங்களை சேர்த்தியும் நாஜூக்கு முள்ளவர்களாய்க் காட்டிக்கொள்ளுவதற்குமே சகல விதமான முயற்சியும் செய்துவருகிறார்கள்" என்று சுவாமி விவேகாநந்தர் சென்னையில் செய்த முதற் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார். இவர் எந்த ஜாதி வேற்றுமையை உண்டுபண்ணினார்? எந்த வகுப்புத்துவேஷி? ஒரு தகப்பன் சில பிள்ளைகளை விட்டு இறக்கிறான் மூத்தபிள்ளை எல்லா ஆஸ்திகளையும் கைக்கொண்டு சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு

[இதன் தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க]

## மாயவரத்தில்

# ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கரும் என். தண்டபாணி பிள்ளையும்.

## உற்சாகமான வரவேற்பும் ஊர்வலமும்

ஊர்வலத்தில் வழிநெடுக மாலைகளும் வரவேற்பும் உபசாரப் பத்திரமும்

அழகிய பல பந்தல்களில் அன்பு நிறைந்த உபசாரம்

முனிசிபல் உபசாரப் பத்திரத்தின்போது கவுன்சிலர்களின் உற்சாகம்.

## மாலைக்கூட்டத்தில் 3000 பேர்கள்.

ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கருப், என். தண்டபாணி பிள்ளையும் சென்னையிலிருந்து 24-க தேதி காலை திருவாரூர் எக்ஸ்பிரசில் மாயவரத்திற்கு வந்து சேர்க்கதும் ஏராளமான காங்கிரஸ் தொண்டர்களும் மற்றும் பொது ஜனங்களும் ஸ்ரீகளும் மகாத்மா காந்திக்கு ஜே! நாயக்கருக்கு ஜே! தண்டபாணி பிள்ளைக்கு ஜே! என்கிற ஆரவாரத்துடனும், மேள வாத்தியத்துடனும் ரயில்வே பிளாட்பாரத்தில் வரவேற்று, மாலையிட்டு, மோட்டார்காரில் ஸ்ரீமான் காயக்கர் தண்டபாணிபிள்ளை ஆகியிருவரையும் முனிசிபல்கவுன்சிலர் ஸ்ரீமான் சிதாராம படையாட்சி அவர்களும் கொராநாடு ஸ்ரீமான் ஓ. கே. ராமசாமி செட்டியார் அவர்களும் ரெ. சின்னையா பிள்ளை அவர்களும் அருகிலிருக்க மாயவரம் டவுனுக்கு இரண்டரை மைலில் தூரம் ஊர்வலமாக ஜாகைக்கு வாத்தியத்துடன் அழைத்துச்செல்லப்பட்டது. வழி நெடுக பெரிய பெரிய வளைவுகள் மகாத்மா காந்திவாழ்க, ஈ. வெ. இராமசாமி நாயக்கர் வாழ்க, பணக்கால் ராஜா வாழ்க என்றும், கயமரி பாதைக்கு ஜே! "குடி அரசு"க்கு ஜே! என்றும் எழுதிக்கட்டப்பட்டிருந்தன. வழி நெடுக அடர்ந்து அடர்ந்து தோரணங்களும் தெரு ஓரங்களில் பச்சைச்செடிகளை வெட்டி நட்டும் அலங்காரம்செய்யப்பட்டிருந்ததோடு முக்கு முக்கு தட்டுப்பந்தல்கள் போட்டு துணிகளாலும் பொம்மைகளாலும் அலங்கரித்து ஊர்வலத்தை நிறுத்தி நிறுத்தி வெற்றிலை பாக்கு சந்தனம்புஷ்பம் பழம் கற்கண்டு வழங்கப்பட்டும் செட்டித்தெரு ஸ்ரீமான் N. முத்தைய முதலியார் அவர்கள் வீட்டுக்கு அழைத்துப் போகப்பட்டது. வழி நெடுக கடைகளிலும் வீடு வீடுகளிலும் போடப்பட்ட மாலைகள் மோட்டாரில் உட்காரக்கூட இடம் இல்லாமல் நிறைந்துவிட்டன. உடனே முனிசிபல் சேர்மென் அவர்களால் அழைப்புடன் அனுப்பப்பட்ட மோட்டார்காரில் முனிசிபல் ஆபீசுக்குச் சரியாய் 11 மணிக்கு நாயக்கரை அழைத்துவந்ததும் சேர்மென் அவர்களாலும் கவுன்சிலர்களாலும் இராமசாமி நாயக்கர்வர்களுக்கு ஜே! என்றகோஷத்துடன் வரவேற்றுமண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. பொது ஜனக்கூட்டம் மண்டபமுழுவதும் நிறைந்து இருந்ததோடு இரண்டுபுறத்திய வராண்டாவும் நிறைந்து வெளியிலும் ஜனங்கள் நிற்கவேண்டியிருந்தது. வரவேற்பு ஆர்வார்க்கள் பின்றதும் முனிசிபல் சேர்மென் அவர்கள் எழுந்து ஸ்ரீமான் நாயக்கர் அவர்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லி, வரவேற்பு உபசாரப் பத்திரத்தைவாசித்துக்கொடுத்தார். வாசித்துமுடித்தவுடன் ஸ்ரீமான் நாயக்கர் பதிலளிக்க எழுந்ததும் மிண்ட கரகோஷமும், நாயக்கருக்கும் ஜே! என்கிற சப்தமும் முழங்க நாயக்கர் பேச ஆரம்பித்தமண்டபம் நிஸ்தப்தமாய் இருந்தது. அதை மறுதரம் முனிசிபல் தலைவர்களைப்பற்றி நாயக்கர் பேசியதும் மறுமுறை சேர்மென் அவர்கள் நாயக்கரைப் பற்றியும் அவர்கள் உரைத்ததைப் பற்றியும் பாராட்டிப் பேசி விட்டு அவற்றைப் பின் பற்றுவதாகவும் சொல்லி மற்றும் வந்திருந்த கனவான்களுக்கு வந்தனமும் செலுத்தினார். கவுன்சிலர் சிதாராம படையாட்சி அவர்கள் காலாயிரப் பிரபந்தத்திலிருந்து ஸ்ரீமான் நாயக்கருக்கும் சம்பவத்திற்கும் பொருத்தமான இரண்டொரு பாசுரங்களையும் நித்தியானுசந்தானத்திலிருந்து இரண்டொரு பாசுரத்தையும் சொல்லி வெற்றிலைபாக்கு சந்தனம் புஷ்பம் கற்கண்டு வழங்கப்பட்டன. சேர்மென் அவர்கள் நாயக்கரின் வருகையை ஒட்டி முனிசிபல் பள்ளிக்கூடங்களுக்கு இன்று லீவு கொடுத்திருப்பதாய்த் தெரிவித்தார். சேர்மென் அவர்கள் கதர் சட்டை அணிந்திருந்ததும் பல கவுன்சிலர்கள் கதர் உடை அணிந்திருந்ததும் வந்திருந்த கனவான்களில் அதிகம் பேர் கதர் அணிந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. பிறகு மாலை 5 மணிவரையில் உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் அநேகர்கள் நாயக்கரின் ஜாகைக்கு வந்து பல விஷயங்களைப்பற்றியும் ஆங்காங்கு பார்ப்பன சூழ்ச்சிகளால் தாங்கள்படும் கஷ்டங்களைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்து சரியாய் 5-30 மணிக்கு காவேரியாற்றுமணலில் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்திற்கு போய் அங்கு ஸ்ரீமான் கார்குடி சின்னையபிள்ளை அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது. மகாநாட்டிற்கு வெளியூர்களில் இருந்து சுமார் 500, 600, பேர்களும் பிராமணர்கள் 500 பேர்களும் மற்றவர்கள் 2,000 பேர்களும் கூடியிருந்தார்கள் மாயவரம் தென் இந்திய நலவுரிமைச் சங்கத்தாரால் ஒரு வரவேற்புஉபசாரப்பத்திரம் வாசித்துக் கொக்கப்பட்டது. அதற்கு பதில் சொல்ல நாயக்கர் எழுந்திருந்திருக்கும்போது, சென்னையிலிருந்து ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி அம்மாள் சென்னை சட்டசபைக்கு டிப்டி பிரசிடெண்டாய் போட்டியன்னியில் ஏக மனதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டதாய் தந்தி வரவும் அதைப்பொது ஜனங்களுக்கு நாயக்கர் படித்துக்காட்டினதும் கூட்டத்தில் இருந்த சுமார் ஸ்திரீ புருஷர்கள் உட்பட 3,000 பேர்களும் பெரிய சந்தோஷஆரவாரம் செய்தார்கள். பிறகு ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்களும், ஸ்ரீமான் சீகாழி சாமிநாத செட்டியார் அவர்களும், ஸ்ரீமான் நாயக்கர் அவர்களும் இரவு 9-30 மணிவரையில் பேசினார்கள். பேசிய விபரமும் உபசாரப் பத்திர விஷயங்களும் அவற்றிற்களித்த பதிலும் சுருக்கமாக வேறிடத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.

### ஒரு வேடிக்கை.

அதாவது நாயக்கர் பேசிக்கொண்டிருக்கும்போது கூட்டத்தில் ஒரு கல் வந்துவிழுந்தது. உடனே அந்தக் கல்லைப்போட்ட ஒரு சிறு பார்ப்பனப்பையனை அங்குபார்த்திருந்த ஒருவர் இழுப்பிடித்துவிட்டார். பையன் அழ ஆரம்பித்தவுடன் சில பார்ப்பனர்கள் ஓடிவந்து அப்பாவது பையன் செய்ததைவிட்டான் அவனை விட்டுவிடுங்கள் என்றுசொன்னார்கள். ஸ்ரீமான் சுப்பிரமணியம் பிள்ளை அந்தப் பார்ப்பனர்களைப் பார்த்து அந்தப் பையன் இன்னமும் பூணூல் போடாததால் பார்ப்பன சட்டப்படி அவன் சூத்திரப்பையனேயாவான் ஆதலால் அவனைப்பற்றி சிபார்சு பேச பிராமணர்களுக்கு உரிமை இல்லை, எங்கள் பையனை நாங்கள் என்னமோ செய்துகொள்ளுவோம், நீங்கள் சிபார்சுக்கு வரவேண்டியதில்லை என்று வேடிக்கையாய்ச் சொல்லி பிறகு அந்தப் பார்ப்பனச்சிறுவனை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்கள்.

### திருபுவனம்.

மறு நாள் காலை 10-30 மணிக்கு மாயவரமிருந்து ரயிலில் சுமார் 10, 15-பேர்களுடன் புறப்பட்டு 11 மணிக்கு திருபுவனம் வந்து சேர்ந்ததும் அங்கு பிளாட்பாரத்தில் திருபுவனம் வாசிகளாலும் திருவிடைமருதூர் வாசிகளாலும் வரவேற்கப்பட்டு முசாபர் பங்களாவுக்கு அழைத்துச்சென்று சாப்பாடு முடிந்தது. மாலை 4 மணிக்கு மேள வாத்தியங்களுடன் திருபுவனத்திற்கு அதாவது ஒன்றரை மைல் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது. மாலையில் கும்பகோணத்திலிருந்து சுமார் 50 கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள். நாகபட்டணத்திலிருந்தும் சில தொழிலாளர்களும் மற்ற பல பக்கத்து கிராமவாசிகளும் விஜயம் செய்திருந்தார்கள். திருபுவனம் திராவிட வாலிப சங்கம் ஸ்ரீமான் நாயக்கரால் திறந்துவைக்கப்பட்டதும் வெளியில் கும்பகோணம் ஸ்ரீமான் வெங்கட்டராம நாயுடு அவர்கள் அக்கிராசனத்தில் ஒரு மகாநாடு கூடியது. அக்கூட்டத்திற்கு சுமார் பிராமணர்கள் ஸ்ரீகள் எல்லோருமாக 1,500 பேர்கள் வந்திருந்தார்கள். அக்கிராசனர் எழுந்து அருப்புக்கோட்டை "நாடார் குலமித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் முத்து நாடார் அவர்களும் சேலம் ஸ்ரீமான் பவானி சிங்கு அவர்களும், கோவை சகோதரிசங்க

காரியதரிசி ஸ்ரீமதி மீனாக்ஷி அம்மாளும் வந்திருப்பதாகவும் இவர்களும் ஸ்ரீமான்கள் நாயக்கர் கண்டபாலி பிள்ளை ஆகியவர்களும் பேசுவார்கள் என்றும் தொண்டனுடன் கூட்டத்தில் ஒரு ஆரவாரம் எற்பட்டது. முறையே அவர்களும் பேசினார்கள். சுமார் 9—30 மணிக்கு கூட்டம் கலைந்ததும் நாயக்கர் முதலியவர்கள் அப்பொழுதே தோழர் கும்பகோணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்கள். மறுநாள் காலையில் தஞ்சாவூர் ஜில்லா போர்டு தேர்தல் விஷயமாக தஞ்சைக்குப் புறப்பட்டுவிட்டார். தஞ்சை ஜில்லாபோர்டு தேர்தல் முடிந்தவுடன் அன்றுமாலையில் தஞ்சை மணிக்கூண்டில் ஸ்ரீமான் ஜ. குமாரசாமிபிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு ஒரு உபந்யாசம் நடந்தது மறுநாள் பகல் 2 மணிக்கு தஞ்சையிலிருந்து புறப்பட்டு 3—30 மணிக்கு பட்டுக்கோட்டை சேர்ந்தும், ஸ்ரீமான் வக்கில் வேணுகோபால்நாயுடு அவர்கள் வீட்டிலிருந்து மேளவாத்தியமும் பாண்டுவாத்தியமும் 40, 50-கபபட்டை கொம்புகளுமாக மோட்டார் வண்டியில் ஸ்ரீமான் தஞ்சைநில்லாபோர்டு பிரசிடெண்டு பன்னீர் செல்வம் அவர்களும், பட்டுக்கோட்டை தாலூகா போர்டு வைஸ் பிரசிடெண்டு அவர்களும், தஞ்சை ஸ்ரீமான் ராமச்சந்திர செட்டியார் அவர்களும் அருகிலிருக்க பெரியகூட்டத்துடன் தேர்முட்டிக்குப் பக்கத்தில் மீட்டிங்கு இடத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்கள் தெரிந்தெடுத்தவுடன் முதல் முதலாக வந்திருந்தபடியால் அதை உத்தேசித்தும் பெருங்கூட்டமும் ஆரவாரமும் அதிகமாயினதோடு பட்டுக்கோட்டை பட்டணம் முழுவதும் திருவிழாக் காலம்போல் தோரணங்களும் அழுத வாக்குகளாகிய வாசகங்களும் கட்டப்பட்டிருந்தன. வழி நெடுக மூவருக்கும் போடப்பட்ட மாலைகள் கணக்கிடமுடியாது. மீட்டிங்கு ஸ்தலமானது ரதம் சிங்காரிப்பதுபோல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கூட்டத்திற்கு சுமார் 2000 பேருக்குமேலாகவே வந்திருந்தார்கள். மகாநாட்டில் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்கள் அக்கிராசனம்வகிக்க வேண்டுமாய் ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடு அவர்கள் பிரேரேபிக்க தாலூகா போர்டு வைஸ் பிரசிடெண்டு அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்கள் அக்கிராசனம் வகித்து ஸ்ரீமான் நாயக்கரைப்பற்றி சிலவார்த்தைகள் சொல்லி, பிறகு நாயக்கருக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டவுடன் சுமார் 3—30 மணி நேரம் நாயக்கர் பேசினார். பேசி முடிந்தவுடன் ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடுகாரால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு கூட்டம் 9 மணிக்கு கலைந்ததும் நாயுடுகாருவீட்டில் விருந்துண்டு இரவு 11 மணிக்கு மேல் தஞ்சாவூருக்கு புறப்பட்டு காலை போட் மெயிலில் திருச்சி மார்க்கம் ஈரோடு பிரயாணமானார். என்று ஒருநிருபர் எழுதுகிறார்.

---

## ஸ்ரீமான் நாயக்கரின் தஞ்சை ஜில்லா பிரசாரம்.

மாயவரம், திருவாரூர், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை முதலிய இடங்களுக்கு சுற்றுப்பிரயாணம் செய்த காலத்தில ஆங்காங்கு ஸ்ரீமான் நாயக்கர் செய்த சுயமரியாதைச் சொற்பொழிவின் சாராம்சம்.

அக்கிராசனரே! சகோதரி சகோதரர்களே! நான் இதற்கு முன்பு இத்தப் பக்கங்களுக்கு எத்தனையோ தடவை வந்திருக்கிறேன். ஒரு காலத்திலும் இது போன்ற மகாநாள் உணர்ச்சியும் எழுச்சியும் கூட்டமும் வரவேற்பு உபசாரம் முக்கியத்துவமும் நான் கண்டதே இல்லை. நம்முடைய எதிரிகள் "வதுப்பு இயக்கங்கள் மாண்டுவிட்டன" "சுருப்புப் போராட்டங்கள் குழிதோண்டி புதைக்கப்பட்டன." "பார்ப்பனரல்லாதார் கட்சி ஒழிந்து விட்டது" "இனி நம்இஷ்டம்போல் கொள்ளை அடிக்கலாம்" என்று சொல்லுகிற காலத்தில் எப்போதும் இருந்ததைவிட எண்மடங்கு அதிகமாய் நமதுகட்சியினுடையவும் இயக்கத்தினுடையவும் உணர்ச்சி வலுத்து வருகிறதுடன் நமது கொள்கையை ஒப்புக்கொள்ளுவதாக புதிது புதிதான இடங்களில் இருந்து ஆதரவுகள் கிடைத்து வருகின்றன.

இன்றையதினம் எனக்குச் செய்யப்பட்ட வரவேற்புகளும் ஊர்வலங்களும் வரவேற்பு உபசாரப் பத்திரங்களும் அதன் மூலம் காட்டிய உணர்ச்சிகளும் ஊக்கங்களும் கண்டிப்பாக எனக்காக அல்லவென்பதையும் அதுகளுக்கு நான் கொஞ்சமும் தகுதியுள்ளவன் அல்ல என்பதையும் எல்லோரையும்விட நான்நன்றாய்அறிவேன், அதோடு நான் அதுகளுக்கு ஒரு சிறிதும்அருகனல்லஎன்பதையும்உறுதியாயும்திரிகரண சுத்தியாயும் சொல்லுவேன் ஆனால்பின்னை எதற்குநான் ஏற்றுக்கொண்டேன் என்று கேட்பீர்களானால், நமது சுயமரியாதைக்காக நான் கைக்கொண்டுள்ள கொள்கைகளுக்கும், அதுகளை உங்களிடையே நிறைவேற்றி வைக்க ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்புக்கும், தொண்டிற்குமென்றே சொல்லுவேன். இதுகளிலிருந்தே எனது கொள்கையையும் தொண்டையும் நீங்கள் அடியோடு ஒப்புக்கொள்ளுகிறீர்கள் என்றும், அதற்காதரவளிக்கத் தயாராயிருக்கிறீர்கள் என்றும் நான் நினைப்பதோடு எனது கொள்கைகளில் எனக்கு முன்னிலும் அதிகமான திடமும், எனது தொண்டைச் செய்ய முன்னிலும் அதிகமான ஊக்கத்தையும் அடைகிறேன். இந்த நம்முடைய சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டும் என்னும் விஷயத்தில் நான் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியானது என்னால் ஏற்பட்டதல்லவென்பதும் இன்று நேற்றுஏற்பட்டதல்ல என்பதும்உங்களுக்கு நன்றாய்த் தெரியும். எந்தக்காலத்தில் நம்முடைய நாட்டில் அன்னியர்கள் பிரவேசித்து நம்மை ஏமாற்றித் தாழ்ந்தவர்களாக்கி நம்மீது ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டார்களோ அந்தக்காலமாகிய ஆயிரக்கணக்கான வருடங்களாகநடந்து வருகிறது. ஆனாலும் நம் முடையஜனத்தையைகட்டுப்பாடும் இல்லாத தன்மையாலும்நம்மைப்பிரித்தவைத்தகமக்குள் சட்சிகளும் துவேஷங்களாலுண்டு பண்ணி வாழ்க்கை நடத்த நமது எதிரிகள் கைக்கொண்ட தந்திரங்களாலும், அவ்வப்போது அந்தந்த பிரயத்தனங்கள் ஜருகியே வந்துள்ளன. இராமாயணபாரத காலமுதற்கொண்டும் அதற்கு முன் வேதகாலம் என்று சொல்லப்படும் கால முதற்கொண்டும் இந்தத் தத்துவத்தை அறுப்படையாகக்கொண்டேஎத்தனையோபோர்கள்நடந்து வந்திருக்கின்றன. வேதம்என்பதின் முக்கியபாகமும் அதன் தத்துவமும்என்னஎன்பதை நீங்கள் அறிய முற்படுவீர்களானால் நம்முடைய சுயமரியாதையையும், சுதந்திரத்தையும், வாழ்வையும், பெருமையையும், ஒழித்து எதிரிகள்கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தும் சூழ்ச்சிகளேயே அடிப்படையாகக்கொண்டது என்பதை ஒவ்வொருவரிலும், ஒவ்வொருபதத்திலும் ஒவ்வொரு எழுத்திலும், ஒவ்வொருஒலியிலும் காண்பீர்கள். இதை ஒழிக்கக்கண்ணுமகட்டிய மகாத்மாக்கள் மத்தியிலேயோபோர்களில் நமது மகாதமா காந்தியும் ஒருவர். இதற்கு முன் எற்பட்ட மகான்கள் என்ன கதியை அடைந்தார்களோ அதேகதியை நமது மகாத்மாவும் அடையும்படியாகவே நமது சுயமரியாதை எதிரிகள் செய்து விட்டார்கள் என்பதை நீங்கள் கண்கூடாகப் பார்க்கிறீர்கள் அல்லவா? ஆதலால் நமது காரியத்தில் நாம் வெற்றிபெறுவது என்பது சுலபமான காரியமல்லவாயினும் அதற்குத் தகுந்த மன உறுதியுடனும் தளரா முயற்சியுடனும் வேலை செய்யவேண்டியது நமது கடமையாயிருக்கிறது. பலகாலமாய் அடங்கிக்கிடந்த முயற்சியானது சமீபகாலத்தில் அதாவது டாக்டர் நாயர், சர். நியாகராயர் காலத்தில் வெளிக்கிளப்பப்பட்டாலும் முளையளவிலேயே வெம்பிக்காயும்படி நமது எதிரிகள் செய்துவிட்டாலும், மகாத்மா காந்தி காலத்தில் காட்டுத்தீப்போல் பரவி சுலபத்தில் அழிந்துவிட முடியாதபடி மக்கள் மனதில் பதியும்படி செய்து விட்டது. நான் இத்தொண்டில் ஈடுபடக்காரணமே மகாத்மா காந்தியால்தான். மக்கள் சுயமரியாதை அடையாமல் விடுதலையோ சுயராஜ்ஜியமோ அடைய முடியாது என்பதை அரசியல் முறையில் மகாத்மா காந்திதான் முதல் முதலாகச்சொன்னதோடு சுயமரியாதை அடைந்து விட்டு, சுயராஜ்யத்தை நினையென்றும் சொன்னார். அதாவது நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்றுவதுதான் சுயராஜ்யம் என்றும், தீண்டாமை ஒழிந்து மக்கள் சமத்வமடைவதுதான் விடுதலை என்றும் சொன்னதே இந்தக்கருத்தைக்கொண்டுதான். அதனால்தான் சுயமரியாதையின் எதிரிகளான பார்ப்பனர்களும் மகாத்மரவையும் காங்கிரசைவிட்டு வெளியில்போகும்படி செய்யவேண்டியதாயிற்று. அதினால்தான் மற்றும் பல பார்ப்பனரல்லாத அரசியல் தலைவர்கள் என்போரும் இக்கருத்தை தைரியமாய் வெளியில் எடுத்துச்சொல்ல பயப்படுகிறார்கள். அதனால் தான் பார்ப்பன

(10ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுமதானே.

# குடி அரசு.

அக்ஷய-வரு-தை-மீ 17-உ

## பத்திரிகைகள்.

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கென்றே வெகு காலமாகவே அதாவது ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே மதம், வேதம், கடவுள், மோக்ஷம் என்னும் பெயர்களால் பலவித ஆதாரங்களையும் ஏற்படுத்திக்கொண்டு அதன் மூலம் தாங்களே உயர்ந்தவர்களாய் நின்று கொண்டு நம்மை எய்த்துத் தாழ்த்தி வாழ்வு வளர்ப்பதல்லாமல், அரசியல், சுயராஜ்யம், தேசியம், தேசியப் பத்திரிகை, தேசசேவை என்கிற பெயர்களாலும் பலவித இயக்கங்களையும் பத்திரிகைகளையும் உண்டாக்கிக் கொண்டு அதன் மூலமும் ராஜாளி தேச பக்தி உள்ளவர்கள் என்றும், தங்களுடைய பத்திரிகைகளே தேசியப் பத்திரிகைகள் என்றும் நமது பணத்திலேயே விளம்பரப்படுத்திக்கொண்டு நம்மை தாழ்த்தி மிதித்து மேலேறி பல வழிகளிலும் வயிறுவளர்க்க ஆதிக்கம் தேடி வைத்துக்கொண்டிருட்டார்கள். இவைகளில் எல்லாவற்றையும் விடநமக்குப்பெரிய ஆபத்தாயிருப்பது பார்ப்பனப் பத்திரிகைகளே. அப்பத்திரிகைகளின் செல்வாக்கு நம் நாட்டை அடியோடு முற்றுகை போட்டுக்கொண்டிருக்கிறது. பாமர மக்கள் மாத்திரமல்லாமல் தங்களைப்போதிய அறிவுள்ள மக்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலரும் அப்பத்திரிகைகளின் மூலம் ஏமாறுவதும் அப்பத்திரிகைகளின் மூலம் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாவதும் வளர்ந்து கொண்டே வருகிறது. தமிழ் நாட்டு மக்கள் இப்பார்ப்பனக்கொடுமை முற்றுகையிலிருந்தும் அன்னிய ஆட்சிக்கொடுமை முறைகளிலிருந்தும் தப்பவேண்டுமானால் இப்பார்ப்பனப்பத்திரிகைகளைப் பார்த்து ஏமாறுவதையும் அதுகளுக்கு அடிமைகளாவதையும் ஒழித்தாலல்லது கண்டிப்பாய் முடியவே முடியாத நிலைமையில் இருக்கிறோம். அவைகள் செய்யும் அக்கிரமங்களை நினைக்கும் போது நமது மக்கள் மனிதர்கள்தானா-மனிதப்பிறவிதானா-இப்பிறப்புக்கு மானம் வெட்கம்என்கிறதன்மைகள் இருக்கின்றனவாஎன்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. நமது கெடுதிக்காகவே இப்பார்ப்பனப் பத்திரிகைகள் கடந்து வருவதையும் பார்ப்பன ஆதிக்கப்பிரசாரமே அதன் கொள்கைகளாக இருப்பதையும் நாம் சந்தேகமறமனப்பூர்ணமாய்த்தெரிந்திருந்தும் இப்பிரசாரங்களுக்கு பணம் கொடுத்து நாம் நாசமாய்ப்போவதற்காக அப்பத்திரிகைகளையே வாங்கிப் படிப்பதென்றால் யாராவது நம்மை அறிவு புத்தி ஒழுக்கம் மானம் வெட்கம் சுயமரியாதை உள்ள சமூகம் என்று சொலலக்கூடுமா? என்பதை நன்றாய் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. பிறரைக் குற்றம் சொல்லும்போதுமாதந்தோறும் "கள்ளு சாராயம் குடிப்பது கெடுதி என்று தெரிந்திருந்தும் மறுபடியும் அதைக் குடிக்கிறார்களே என்ன புத்தி கெட்ட ஜனங்கள், மானங்கெட்ட ஜனங்கள்" என்கிறோம். அவ்வளவு ஆத்திரமும் மானமும் நமக்கு இருக்கிறதா என்பதைப் பார்ப்பவர்கள் நம்மில் 1,000க்கு ஒருவரைக்கூடக்காணோம். பார்ப்பனப்பத்திரிகைகள் பார்ப்பன ஆதிக்கத்தைத் தவிர வேறு வேலை எதாவது செய்வதைப் பார்த்திருக்கிறீர்களா? நம்மை நாமே கெடுத்துக்கொள்ள நமது பணமே உதவவேண்டுமா? அதற்கு விளம்பரம் கொடுப்பவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார்களே. அதை வாங்கிப் படித்துக் கெடுகிறவர்கள் பார்ப்பனரல்லாதார்களே! இதில் ஏதாவது ரகசியம் இருக்கிறதா அல்லது இப்பார்ப்பனர்கள் எதையாவது ரகசியமாய்ச் செய்கிறார்களா? கேருக்கு நேராக நம்மைப் பார்த்து "நீங்கள் முட்டாள்கள் உங்களுக்கு மானம் வெட்கம் சுயமரியாதை புத்தி அறிவு இவைகள் கிடையாது ஆதலால் நாங்கள் உங்களை ஏமாற்றுகிறோம். உங்களால் என்னசெய்ய முடியும்? உங்களில் யாரோ சிலர் கத்தினால் கத்தட்டும் எங்களுக்கு கவலை இல்லை. இதற்காக நாங்கள் கொஞ்சமும் பயப்பட்டு எங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ளப்போவதில்லை. உங்களிலேயே சில அயோக்கியர்களையும் முட்டாள்களையும் நாங்கள் சுவாதீனஞ்செய்துகொண்டு உங்கள் கத்தல்களை ஒழிக்க எங்களுக்குத் தெரியும் ஒரு கை பார்க்கலாம் வாருங்கள்" என்று தைரியமாகச் சொல்லுகிறார்கள்; இதற்கொன்றும் மார்க்கமில்லையா வென்றுதான் கேட்கிறோம். "குடி அரசு" தோன்றிய பிறகு "மித்திரன்" சுமார் 2000 சந்தாதாரர்களுக்கு மேலாகவே இழக்க நேரிட்டும் இன்னமும் பார்ப்பனரல்லாதாரிலேயே பல பங்குக்காரர்களை ரகசியமாக சேர்த்து பணம் சம்பாதிக்கப்பட்டு வருகிறது. நமதவர்கள் முன்னேற்றத்திற்கென்றே நடத்தப்பட்டுவருகிற பத்திரிகைகளை கையில் தொடுவதற்கும் நமதுமக்கள் அஞ்சுகிறார்கள் என்றால் நமதுபோக்கியதையை என்னவென்று சொல்லுவது சாதாரணமாக "திராவிடன்" பத்திரிகை எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வருகிறது என்பதை யாராவது உணருகிறார்களா? அது யாருடைய நன்மைக்கு நடத்தப்படுகிறது என்பதை யாராவது அறிகிறார்களா? யாரையாவது போய் "ஐயா திராவிடன் பத்திரிகைக்காகளுக்கு வருகிறதா? இல்லையானால் ஒன்று வரவழையுங்கள், அதைப்படித்து பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும். அதனால் நம்மவர்களுக்கு எற்படும் கஷ்டத்தையும் உணர்ந்து அதிலிருந்து தப்புவதற்கு வேண்டியது செய்யுங்கள்" என்றால், "திராவிடனு அதிலென்ன இருக்கிறது அதைப்பார்த்தாலே என்னமோ போல இருக்கிறதே அந்தப் பெயரே நமக்குப் பிடிக்கவில்லையே" என்று சொல்லிவிடுகிறார்கள். இதைக்காளுக்கு தேன்மாதிரி வால்தனமாகக்கான் சொல்லுகிறார்கள் என்றாலவைக்குக்கொள்ளுவோம். கட்டின பெண்ஜாதியை விட்டுத்தள்ளிவிட்டுக்கப்போய் கொத்தனைப் பாழாக்கி வியாதி கொள்ளுகிறவர்களைப் பார்த்து "எனப்பா கட்டின பெண்ஜாதியை விட்டில் வைத்துவிட்டு தாசி வீட்டிற்குப்போய் சொத்தையும் பாழாக்கி வியாதியும் கொள்ளுகிறாய்" என்றால், மேல்கண்டமாதிரிதான் பதில் சொல்லுகிறான். அதாவது:—

"வீட்டில் என்ன இருக்கிறது, அவளைப் பார்த்தாலே எனக்குப் பிடிப்பதில்லை. அவள் நடந்துகொள்ளுகிறமாதிரியே மனதிற்கு அசிங்கியமாகப்படுகிறது. கட்டினுண்டா? மெத்தையுண்டா? வாசனையுண்டா? கடிப்பதுண்டா, கிள்ளுவதுண்டா, சட்டி பானை கழுவுகிறவள் தானே" என்று ஆரம்பித்து விடுகிறானேயல்லாமல் இதெல்லாம் எதற்காகச்செய்யப்படுகிறது பின்னால் நம்முடைய கதி என்னாகும் என்கிற கவலையே இல்லாமல் அறிவீனமாய் நடந்துகொள்ளுகிறான். அப்படிபோல் நம்மை மயக்கி, ஏய்த்து, நம்மைப்பாழாக்கி, கொள்ளை கொள்ள நடக்கும் பத்திரிகைகள் ஏமாற்றத்தகுந்தமாதிரியாகத்தான் நடத்தப்படும். ஒருநாள் பூரா படிப்பதற்கும் விஷயமிருக்கலாம், ஆனால் அது பெரும்பாலும் என்ன விஷயம்? நமமைக்கழுத்தறுக்கும் விஷயமும், பொழுதுபோக்கு விஷயமுமாகத்தானே இருக்கும். ஆதலால் மானமுள்ள மக்கள தமது சொந்தப்பெண்டை "அன்னியன் குற்றம் சொல்லும்படியாகவும், கஞ்சிக்குத்திண்டாடும் படியாகவும்விடாமல், காப்பதை எப்படி தமது கடமையாய் நினைப்பார்களோ அதுபோல் "திராவிடன்" பத்திரிகையை ஆதரிப்பதோடு கட்டின பெண்டை தெருவில் அலையவிட்டு தாசி வீடு காத்துத்திரிவதுபோல் "திராவிடனை" விட்டுப் பார்ப்பனப்பத்திரி

## பார்ப்பனப் பத்திரிகைகளின் தொல்லை.

ஸ்ரீமான் பன்னீர்ச்செல்வம் தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டாக 3-ல் 2-பங்கு மெம்பர்களுக்கு அதிகப்பேர்களாலேயே தெரிந்தெடுக்கப்பட்டும், அவரைப்பற்றியும் அத்தேர்தலைமுறையைப்பற்றியும் பார்ப்பனப் பத்திரிகைகள் செய்யும்கொலைபாதகத்திற்குச்சமானமான கொடுமையும்பார்ப்பனர்கள் செய்யும்அக்கிரமங்களும் கேட்போர் மனம் பதைபதைக்கும்படியாகவே இருக்கும்.

ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கு வரும் பிப்ரவரி மாத முதல் வாரத்தில் அவருடைய ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்தானம் காலியாகும். அதலால் அவர் மறுபடியும் பிரசிடெண்டு தேர்தலுக்கு நிற்க யோக்கியதை உண்டாகும்படியாக லோகல் போர்டு இலாக்கா மந்திரியாகியடாக்டர் சுப்பராயன் அவர்களை ஜில்லா போர்டு மெம்பராக நியமனம்செய்யும்படி கேட்டுக்கொண்டார். போர்டு வைஸ் பிரசிடெண்டும் போர்டின் மூலம் கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்தார். மந்திரி,பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டோ அல்லது பார்ப்பனர்களுக்கு கல்ல பிள்ளையாக நினைத்தோ நியமனம் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டாராம். அதன்மேல் ஜில்லா போர்டு மெம்பர்களின் 27 பேர்கள் சேர்ந்து, ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தை ஜில்லா போர்டு மெம்பராய் நியமிக்காவிட்டால் அவர் அடுத்த தேர்தலுக்கு நிற்க முடியாதென்றும், அவர் மறுபடியும் தலைவராகவர நாங்கள் விரும்புகிறோமென்றும் காரணமின்றி சட்ட நிர்ப்பந்தத்தால் மாத்திரம் அவருக்கு ஏற்படும் கஷ்டத்தை விலக்குவதற்கு வேறு வழி இல்லையென்றும், மற்றும் அவருடைய நிர்வாகத்தைப் புகழ்ந்தும் ஒரு மகஜர் அனுப்பினார்களாம். அதன் பேரில் மந்திரி ஒன்றும் செய்ய முடியாமல் போனதால் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் மறுபடியும் ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு நிற்பதில் சட்டப்படிக்கான தடை ஒன்றும் இல்லையென்றும், ஆனால் தேர்தல்மாத்திரம் அவர் காலாவதி தீருவதற்கு முன்னாலேயே செய்து கொள்ளவேண்டும் என்றும் ஒரு G. O (கவர்ன்மெண்டு உத்திரவு) அனுப்பிவிட்டார். அதன்படி காலாவதி தீர 10 நாளைக்கு முன்னால் ஜில்லா போர்டு தலைவர்பதவிக்கு ஒரு தேர்தல் போட்டு அந்தப்படியே தேர்தல் நடந்தது. ஆனால் நமது பார்ப்பனர்கள் தேர்தலை நிறுத்த மந்திரியைப் பிடித்து வேலைசெய்யத்தங்களால்கூடுமானதெல்லாம் செய்து பார்த்தார்கள். மந்திரியால் முடியாமல் போய்விட்டது. கடைசியாகத் தேர்தலுக்கு முதல்நாள் முனிசிப்கோர்ட்டில் தடை உத்திரவு கேட்டார்கள். அந்த முனிசிப்பு முதல் நாள் கேசை விசாரித்துவிட்டு தேர்தல் தினத்தன்று 11 மணிக்கு தீர்ப்புக்கூறுவதாய்ச்சொல்லிவிட்டார். தேர்தலுக்காக எல்லா மெம்பர்களும் வந்துவிட்டார்கள். கடைசியாக 11 மணிக்கு முனிசிப்பு தடை உத்திரவு கொடுக்கமுடியாதுஎன்றும், தேர்தல் நடத்தலாம் என்றும் தீர்ப்புச்சொல்லி விட்டார். இந்தப் பார்ப்பனர்கள் இதோடு விடாமல் 12 மணிக்கு ஜில்லா ஜட்ஜியிடம் அத்தீர்ப்பின்மேல் அப்பில் செய்தார்கள். அதாவது தேர்தல் சரியாய் 2 மணிக்கு நடக்கவேண்டும்; ஆனால்இவர்கள் தேர்தலுக்காக பிரசாரம்கூட செய்யவொட்டாமலும் தாங்கள் பாத்திரம் ஒரு ஓட்டருக்கு ஒரு பார்ப்பனர் வீதம் வேலைசெய்துகொண்டும் உபத்திரவம் செய்தார்கள். ஜில்லா ஜட்ஜி 1 மணிவரை இழுத்தடித்த ஆர்க்கு மெண்டையும் கேட்டுவிட்டு கடைசியாக பார்ப்பனர்களின் அப்பீலை செலவுடன் தள்ளிவிட்டார். உடனே 2 மணிக்கு தேர்தல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் இன்னொருவேடிக்கை என்னவென்றால் கும்பகோணம் தாலூகா போர்டிலும் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டு ஜில்லாபோர்டு மெம்பர்களை ஓட்டுச்சேர்க்காமல் தடுப்பதற்காக அவர்களை பெயரை கெஜட்டில் வராமல் சூழ்ச்சிசெய்தார்கள் இதனிமித்தம் தெரிந்து அவர்கள் பெயரை உடனே கெஜட் செய்யும்படியாய் தந்தி கொடுத்ததும் பெயர் கெஜட் செய்ய உத்திரவு விட்டதாக தந்தி வந்தது. உடனே கும்பகோணம் மெம்பர்களை தேர்தல் தினத்தன்று தருவிக்க தாய் விட்டதனால் தேர்தல் நடத்த ஆரம்பிக்கும் சமயத்தில் பட்டணத்திலிருந்து அவ்விரு மெம்பர்கள் பெயரும் சேர்க்கப்படவில்லை என்று ஒரு தந்தி வந்தது. அந்த இரண்டு மெம்பர்களையும்நிறுத்திவிட்டுதேர்தல் ஆரம்பிக்கப்பட்டது ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தின் பெயரை பிரேரேபித்தவுடன் ஒரு மகாநிய கனவான் விட்டு சட்டப்படி பன்னீர்செல்வம் நிற்பது ஒழுங்கல்ல என்று ஆக்ஷேபணை சொல்லச் செய்தார்கள். தேர்தலுக்கு அக்கிராசனம் வகித்த உப அக்கிராசனரும் அவ்வாக்ஷேபணையைத்தள்ளிவிட்டார். உடனே வேறு ஒரு கனவான் பெயரை பிரேரேபிக்க ஆரம்பித்தார்கள். போட்டிப் பெயராக ஸ்ரீமான்கள் நாடிமுத்து பிள்ளையவர்கள் பெயரும் மருதவனம் பிள்ளை அவர்கள் பெயருமே அடிபட்டு வந்தமை நேயர்களுக்குத் தெரியும். ஆனால் தேர்கல் சமயமவரையார் நிற்பது என்பது உறுதிப்படாமல் ஒருவருக்கொருவர் நான் மாட்டேன், நான் மாட்டேன் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள்; அனகினால் இந்தப் பார்ப்பனர்களுக்கு இவ்விருவரிடத்திலும் யார் பேரில் அதிக நம்பிக்கையோ அதாவது வேண்டாமென்று சொல்லமாட்டார்களோ அவர்களைப் பார்த்துக் கண்டு பிடித்து ஸ்ரீமான் மருதவனம்பிள்ளை பெயரை ஒரு அய்யங்கார் பார்ப்பனர் பிரேரேபித்தார். ஒரு அய்யர் பார்ப்பனர் ஆமோதித்தார். ஓட்டு போட்டவுடன் முடிவு தெரிவதற்கு முன்னாலேயே இக்கூட்டம் அநேகமாய் ஓடிப்போய்விட்டது. எண்ணிப்பார்க்க ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கு 27 ஓட்டுகளும் ஸ்ரீமான் மருதவனம் பிள்ளைக்கு 10 ஓட்டுகளும் கிடைத்தன. பட்டணத்திலிருந்து பொய்த் தந்தி கொடுக்கப்பட்டிருக்காவிட்டால் ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கு 29 ஓட்டுகள் கிடைத்திருக்கும். அக்கிராசனர் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் 27 ஓட்டுகளால் தெரிந்தெடுக்கப்பட்டதாய் முடிவு சொன்னதும் ஜனங்களின் ஆரவாரத்திற்களவில்லை. மற்ற விஷயம் மறுமுறை எழுதலாம். இப்போது எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு மறுபடியும் போகலாம். அதாவது தெரிந்தெடுக்கப்பட்டபிறகும் இத்தேர்தல் சம்பந்தமாய் பணகால் ராஜாவின்மீது பழிசொல்லிப் பார்ப்பனப் பத்திரிகைகள் கண்டபடி எழுதி ஜனங்களுக்குள் தேர்தல் விஷயமாயும் பணகால் விஷயமாயும், ஸ்ரீமான் பன்னீர்செல்வம் விஷயமாயும் கற்பனைகளைக் கற்பிக்க பாடுபடும் காரணம் என்ன? உத்திரவு போட்டது டாக்டர் சுப்பராய மந்திரி; இதில் பணகால் மந்திரிக்கு சம்பந்தம் என்ன? அவரை எதற்குகிட்ட வேண்டும்? இதில்உள்ள சூழ்ச்சியைகொஞ்சம் கவனமாய் படிக்கவேண்டும். அதாவது பணகால் மந்திரி காலத்தில் ஒரு பார்ப்பனரல்லாதார் போர்டு பிரசிடெண்டு தன் காலாவதி சிக்கிரத்தில் முடியப்போகிறபடியால் தான் மறுபடியும் தேர்தலுக்கு நிற்க யோக்கியதை உண்டாக்கிக் கொள்ளும்படியாக தன்னை மறு நியமனம் செய்யுமபடி பணகாலை கேட்டுக்கொண்டார். பணகால் உடனே நியமனம் செய்யாமல் கொஞ்சம் தாமதம் செய்யவே பணகால்மீது இப்பார்ப்பனரல்லாதார் போர்டு பிரசிடெண்டுக்கு சந்தேகம் ஏற்பட்டு சட்டத்தைத் திருப்பித்திருப்பிப் பார்த்து சென்னை சட்டம்வல்ல பார்ப்பனர் களையும் கண்டு யோசித்தது தான் மறு நியமனம் பெறுமலை தனது காலாவதி முடிவதற்குள் தேர்தல் எற்படுத்தி அதில் நிற்கச் சட்டம் இடம் கொடுக்கிறது என்பதாகக் கண்டுபிடித்து உடனே தேர்தல் நடத்தி அதில் தான் தெரிந்தெடுத்ததாய் சர்க்காருக்கு அறிவித்து விட்டார். சர்க்கார் (பணகால்) இது சட்டப்படி செல்லாது என்பதாக அபிப்பிராயப்பட்டார். மற்றொரு பொறுப்புள்ள உத்தியோகஸ்தர் இது செல்லும் என்று அபிப்பிராயப்பட்டார். கடைசியாக அட்வொகேட் ஜனரல் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டது; அதுசெல்லும் என்று அட்வொகேட்ஜனரல் அபிப்பிராயம் சொல்லிவிட்டார். பிரசிடெண்டு ஸ்தானம் உறுதியாய்விட்டது. அந்த பார்ப்பனப் பிரசிடெண்ட் இப்போது இந்திரபோகம் அநுபவிக்கிறார். இதைப் பற்றி ஒரு பார்ப்பனப் பத்திரிகையும் மூச்சுக்கூடவிடவில்லை. ஏன்? அந்தபோர்டு பார்ப்பன அக்கிராஹாரமாகவும், அன்னசத்திரமாகவும் இருந்து வருகிறது. ஒரு பார்ப்பனர் ஆசைப்பட்டார். ஒரு பார்ப்பனர் யோசனை சொன்னார், ஒரு பார்ப்பனர் தேர்தல் நடத்தினார், ஒரு பார்ப்பனர் செல்லுமென்றார், ஒரு பார்ப்பனரல்லாதார் தான் (பணகால்) அப்போதே இது சட்டவிரோதமென்றார். இப்போது இந்த விஷயம் இதேமாதிரி ஒரு பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்டுவிடவே அதேகூட்டத்துப் பார்ப்பனர்களுக்கு இது

---

கைகளைக்கட்டி அலைவதை மறந்து நமதுமானத்தைக் காப்பாற்ற உதவி செய்யவேண்டும் என்பதாக தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த மார்க்கம் தான் பாமரமக்களைக்காப்பாற்றவும், நமது மக்கள் எல்லோருக்கும் சுயமரியாதை ஏற்படவும் சரியான மார்க்கமாகும்.

சமயம்இதுசட்டசபைதாமாய்க்காணப்படுகி றது. அதாவதுசட்டத்திற்குத்தாங்கள் கான் மதுபவம்று எண்ணிக்காண்டிருக்கிறார்கள். என வள்று பார்த்தால் சட்டம் செய்வது பார்ப்பனர் சட்டதிற்கு விரோதமாகசெய்வது பார்ப்பனர் சட்டவாதிபார்ப்பனர், சட்ட அதிபதி பார்ப்பனர், ஆகவே வக்கில் முன்சீப் முதல் ஜெகார்ட் ஜட்டி சட்ட மெம்பர் வரையிலும் பார்ப்பன மயம் அப்படி இருக்கும்போது வேறு ஒருவர் எப்படி தங்களது சட்டதில் தீறக்கூடும் என்கிற ஞாயம் தான்.

நீதிக இதேமாதிரி திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்ட் தெரிந்தெடுக்கப்பட்டார். அப்பதவிற்கு ஒருவர்தவிர வேறு ஒரு பார்ப்பனராவது அவர்களுடைய பத்திரிகைகளாவது வழுதவும் இல்லை. பேசவும் இல்லை தேர்தலிலும் ஆசேபிக்கவே இல்லை, ஓட்டும் இல்லை, அபிப்பி யமும் இல்லை; ஏனென்றால் ஸ்ரீமான் குமாரசாமி செட்டியார் அவர்களைப்பற்றி நமது பார்ப்பனர்களுக்கு அவ்வளவு விரோதமில்லை. காரணம் என்னவென்றால் அந்த பார்ப்பனர்கள் சப்பிட தர்ம சத்திரங்கள் இல்லை. சம்பளமில்லாத பள்ளிக்கூடங்கள் இல்லை; இது தான் காரணம். அல்லாமலும் தஞ்சை ஜில்லா போர்டில் தஞ்சை ஜில்லா போர்டின் உத்தியோகஸ்தர்களில் 100க்கு 90 பேர் பார்ப்பனரல்லாதாராக ஆகும் வரையில் பார்ப்பனருக்கு உத்தியோகம் கொடுக்கக் கூடாது என்பதாக ஒரு தீர்மானமும், பட்டுக்கோட்டை ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடுகாரால்கொண்டுவரப்பட்டதுநிறைவே ற்றவைக்கப்பட்டிருக்கிறது. இதில ஒரு வேடிக்கை என்னவென்றால் இப்பார்ப்பனர்கள் எவ்வளவு கொடுமை செய்தாலும் எப்போர்ப்பட்ட தீர்மானமிருந்தாலும் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதில் மாந்தியம் குறைவில்லை. இதற்கு ஒரு சிறு உதாரணம்— அதாவது தஞ்சை ஜில்லாவில் ஒத்துழையாமைப்பெயரையும், காங்கிரஸ் பெயரையும், வைத்துக்கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் ஜில்லாவில் கட்சியை வைவதிலும் வகுப்பு பிரசாரம் செய்வதிலும் போர் போனவர் ஸ்ரீமான் சூரியநாராயண அய்யர் அவர்கள். அவர் இத்தேர்தல் களிலும் இதற்கு முன் தேர்தல்களிலும் பாப்பனரல்லாதாருக்கு விரோதம் செய்தது இவ்வளவு அவ்வளவு அல்ல; அப்படிப்பட்ட ஸ்ரீமான் சூரியநாராயண ஐய்யர் அவர்களுக்கே அவருடைய மூன்று பிள்ளைகளுக்கும் ஜில்லா போர்டில் உத்தியோகம் கொடுத்திருக்கிறார் என்றால் மற்றபடி எத்தனை பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கொடுத்திருப்பார் என்பதைவாசகர்களே உணரட்டுமே.

## திருவண்ணாமலை

சேர்மன் ஸ்ரீமான் முத்துக்குமாசாமி முதலியார் முயற்சியால் தென் இந்திய நல வரிவமைச்சங்கத் திறப்புவிழா பிப்ரவரிமாதம் 6-ந் தேதி ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தலைமையில் நடைபெறும். சென்னையிலிருந்தபல தலைவர்கள் வருவார்கள். என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கிழேவிழுந்தும் மீசையில் மண்ணொட்டவில்லையாம்.

நமது பார்ப்பனர்கள் எவ்வளவோ பாடுபட்டும் இந்நாமத பரிபாலன மசோதாவை நமது சட்ட சபையில் ஒரு கட்டளைக்கு இரண்டு தடவையாக நிறைவேறி இரண்டு கவர்னர் பிரபுக்கள், இரண்டுலைகோர்ட் ஜட்டிக்கள் அதிபர்கள் சம்மதமும் அளவற்ற பொருளும்மதமும்பெற்று சட்டமாகிவிட்டது. இனி மகந்துக்கள், மடாதிபதிகள் பணம் நமது பார்ப்பனர்களுக்கும் அவர்களது தேர்தலுக்கும் கிடைப்பது முடியாத காரியம். இதற்காக நமது பார்ப்பனர்கள் ஒரு தோற்றம் பண்ணி பிடித்து இருக்கிறார்கள். அதாவது "கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்பதுபோல் மறுபடியும் இதைப்பற்றி நிருத்தசபை புருத்தசபை செய்யலாம் என்பதாக மந்திரியைக்கொண்டு ஒரு வார்த்தை வாங்கிவிட்டார்களாம். இது இன்னமும் எமாற்றி மடாதிபதிகளிடம் பணம் வாங்கவே அல்லாமல் வேறல்ல.

நமது ஊரில் ஒரு பார்ப்பனக் கிழவக்கீல் இருந்தார். அவர் மேஜிஸ்ட்ரேட் வீட்டிற்கு போய் தனியாய் தன்னைப்பற்றி கொஞ்சம் கவனித்துக்கொள்ளும்படி கெஞ்சுவார். மேஜிஸ்ட்ரேட் என்னய்யா செய்யச் சொல்லுகிறீர் என்று கேட்டால் "ஜமானர் செய்கிறபடி செய்துகொள்ளுங்கள். ஆனால் என் கட்சிக்காரனிடம் தாங்கள் தீர்ப்பு சொல்லுகிறபோது இந்த கேசு இன்னமும் அதிகமாக தண்டிக்கவேண்டும் உங்கள் வக்கீலுக்காக இவ்வளவோடு விட்டேன்" என்று சொல்லிவிடுங்கள்; அதுவே போதும்; நான் பிழைத்துக்கொள்ளுவேன் என்று சொல்லுவார். அதுபோல் மந்திரி இடம் போய் கெஞ்சி இப்பார்ப்பனர்கள் பிழைக்க வழி தேடிக்கொண்டார்கள். மற்றபடி சட்டத்திற்கு ஒன்றும் ஆபத்து இல்லை. ஆனால் உண்மையான மத பரிபாலனத்திற்கு இந்த சட்டம் போதாது என்பதும் இன்னமும்பல மான சட்டம் செய்யவேண்டும் என்பதும் நமது கோரிக்கை. இந்த மந்திரி சபை கலைந்தோ அல்லது இந்தசட்டசபை கலைக்கப்பட்டோ மறுபடி கூடுசபைகளில் அதுவும் கண்டிப்பாய் நடைபெறுமென்றே நினைக்கிறோம்.

## சென்னை சட்ட சபைக்கு சேமாட்டித் தலைவர்,

நமது சட்டசபைக்கு உபதலைவர் வேலைக்காக சுமார் 4, 5, மகமதிய கனவான்கள் தலையை நீட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கே கொடுப்பது என்று மூன்று கட்சியாரும் சம்மதித்துமிருந்தார்கள்! ஆனால் அவர்களின் போட்டியாலும் ஒவ்வொரு கட்சியார் ஒவ்வொரு மகமதிய கனவானே விரும்பியதாலும் ஏகோபித்த அபிப்பிராயம் கிடைக்காமல் போனதால் மகமதிய கனவான்கள் நிற்பதற்கே தைரியம் கொள்ளவில்லை. ஆனால் கோவை ஸ்ரீமான் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியாரைச்சில கனவான்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க அவரும் நிற்பதாய்ச்சம்மதித்தார். ஜஸ்டிஸ் கட்சியாரும், மகிதி கட்சியில் சிலரும் ஆதரிப்பதாய் வாக்கும் கொடுத்தார்கள். அப்படி இருந்தும் ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியார் அவர்களுக்கு ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளின் ஓட்டுப்பிறக்கும்போது அந்த அம்மாளோடு உபகிவர் பதவிக்கு தெரிந்தெடுத்தால் நமது சமூகத்திற்கும் காட்டிற்கும் ஒரு கௌரவம் ஏற்படும் என்பதாய் நினைத்து தான் நிற்பது என்கிற எண்ணத்தை உடனே மறந்துவிட்டு அந்த அம்மாளுக்காகவே பிரயத்தனப்படுவதாய் எல்லோரிடத்திலும் சொல்லிவிட்டார். இது முடிவான பிறகுதான் ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளுக்கே இந்த விஷயம் தெரியவரும் என்றே சொல்லலாம். கடைசியாக ஸ்ரீமான் முதலியார் நினைத்தபடி காரியம் முடிந்தது. நமது சமூகத்தில் பெண்கள் சட்டசபைத் தலைவர் பதவிமாத்திரமல்ல மந்திரி வேலை கூட பார்க்கத்தக்கவர்கள், ஆசாட்சியும் புரியத்தக்கவர்கள், என்கிற பெருமையும் நம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டது. இதன் பெருமை குறிப்பாக ஸ்ரீமான் C.S இரத்தினசபாபதி முதலியாருக்கும் சிறப்பாக ஸ்ரீமான்கள் டாக்டர் சுப்பராயன், P. T. ராஜன் ஆகியவர்களுக்கும் பொதுவாக சென்னை சட்டசபை மெம்பர்களுக்கும் சேர்ந்தது என்பதை தெரிவித்துக்கொண்டு அவர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம்.

[7ம் பக்கத்தொடர்ச்சி]

ர்களும் இக்கொள்கைகளைத் தேசத் துரோகக்கொள்கைகள் என்றும், நாஸ்திகக்கொள்கைகள் என்றும், வகுப்புத்துவேஷக் கொள்கைகள் என்றும் விஷமப்பிரசாரம் செய்கிறார்கள், ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் மனப்பூர்வமாய் சரி என்று நினைப்பதை என்னவரினும் அஞ்சாமல் காரியத்தில் நடத்திவைக்க முயற்சிக்கவேண்டும். இத்தத்தடவையாவது நமது எதிரிகளின் சூழ்ச்சிகளுக்குப்பயந்து அரை குறையாய் விட்டு விட்டு ஓடிப்போகாமல் கடைசிவரை போராடி அதற்காகவே உயிரைக்கொடுத்து நமது சுயமரியாதையை அடையவேண்டும். சுயமரியாதை அடைந்து விட்டால் சுயராஜ்யம் என்பது கண்மூடி கண் திறப்பதற்குள் தோன்றிவிடும். சுயமரியாதை அடைந்த நிலையே சுயராஜ்யம். சூரியன் உதயமான பிறகு ஒரு ஆள்வைத்து இருட்டைக் கழுத்தைப்பிடித்துத் தள்ளவேண்டுமா? அது போலவே சுயமரியாதையான சூரியன் உதயமாகி விட்டால் அடிமைத்தனம், அன்னிய ஆதிக்கம் ஆகிய இருட்டுகள் யாரும் கழுத்தைப்பிடித்துத்தள்ளாமலே தானே இருந்தவிடம் தெரியாமல் ஓடிவிடும். ஆதலால் உண்மையான சுயராஜ்யம் அடைவதற்கு சுயமரியாதை தான் ஒரே ஒப்பற்ற மார்க்கம் என்றும், அதுவே மனிதரின் பிறப்புரிமை என்றும் உறுதிகொண்டே அதற்காக உழைக்கும்படி உங்களைப் பிரார்த்திக்கிறேன். (தொடரும்)

## திருத்தம்.

இவ்விதழ் 3-வது பக்கம 15வது வரியில் P. வரதராஜலு நாயுடு என்பதை T. வரதராஜலு நாயுடு என வாசிக்கவும்.

## "திராவிடன்," "குடி அரசு" "ஜஸ்டிஸ்" சந்தா நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

திராவிடாபிமானிகளே! பாஷாபிமானிகளே! பார்ப்பனல்லாத பெருங்குடி மக்களே! மதுரைமாகாநில் நடந்த பத்தாவது மகாநாட்டில் நமது முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமான வைபத்திரிகைகள் என்றும், அதை ஒவ்வொரு பார்ப்பனரல்லாத மக்களும் வாசிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்துள்ளோம். மகாநாடு நடந்து ஒரு மாதம் ஆய்விட்டது. எத்தனை பேர்கள் புதிய சந்தாதார்களாகச் சேர்ந்திருக்கிறார்கள்? என்பதை ஒவ்வொருவரும் ஆராய்ச்சி செய்யவேண்டும். எந்த ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானாலும் எந்த ஒரு சமுகம் முன்னேற்றமடைய. வேண்டுமானாலும் அதற்கென்று ஏற்பட்டிருக்கும் பத்திரிகைகள் வளர்ந்தாலன்றி குறித்த எண்ணம் கைகூடாது. நமது தமிழ் நாட்டில் தேச சேவை செய்யும் பத்திரிகைகள் பல மறைமுகமாக சொந்த சமுக சேவையும் செய்துவருகின்றபடியால், நமது நாட்டில் மிகமிக சுலப்ப ஜனத்தொகையுள்ள ஒரு வகுப்பார் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். அந்த ஜாதியாரால் நடத்தப்படும் பத்திரிகைகளோ சுஜாதி அபிமானத்தால் எல்லாப் பார்ப்பனர்களும் ஆதரித்து வருவது கிமமே. அது போலவே நமது முன்னேற்றத்திற்கு உழைத்துவரும் பத்திரிகைகளை நாம் ஆதரித்துவர ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் செய்கையில் மாறுபட்டிருப்பதை ஒழிப்பதற்கில்லை. நமது வகுப்பினர்களாகிய பார்ப்பனரல்லாதார் எத்தனைபேர் "திராவிடன்," "குடி அரசு," "ஜஸ்டிஸ்" படித்து வருகிறார்கள்? எத்தனை பேர் "சுதேசமித்திரன்," "சுயராஜ்யா" படித்துவருகிறார்கள்? என்ற கணக்கும் அது போலவே பார்ப்பனர் எத்தனைபேர் "திராவிடன்," "ஜஸ்டிஸ்," "குடி அரசு" படித்து ஆதரித்து வருகிறார்கள் என்று கணக்குப் பார்த்தால் நமது அறியாமையும், வெட்கமும் தெள்ளென விளங்கும். அதுமட்டுமல்ல, நமது பத்திரிகைகளை ஆதரிக்காமல் நமக்கு எதிரிடையான பத்திரிகைகளை ஆதரித்ததால் வந்த கெடுதியும் அடிமைப் புத்தியும் நடு நிலைமையிலுள்ளவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியும். சென்ற தேர்தலின்போது பார்ப்பனரல்லாதார் ஏமாந்து போவதற்கு காரணம் என்ன? நமது எதிரிகளின் பத்திரிகை பிரசாரமல்லவா? பொய்யும், புளுகும், சூதும் எவ்வளவு செய்தன? உதாரணமாக, ஒரு பத்திரிகை மும்முரமாக ஓட்டுகள் தயார் செய்து கொண்டிருக்கும்போது 'ஒரு நல்ல செய்தி' என்று தலைப்பிட்டு, பணகால் ராஜா தோற்றார், அல்லாடி ஜெயித்தார் என்றும், டாக்டர் சுப்பராயன் தோற்றார், எம்பள்ளி ஜமீன்தார் ஜெயித்தார் என்றும் பிரசுரித்து வியாக்கியானம் எழுதி சர்க்கரை வழங்கும்படி செய்ததால், இப் பத்திரிகைகளை வேதவாக்காக நினைத்துக்கொண்டிருக்கிற நாம் நடக்கிற எருத்தை வாலைப்பிடிக்கிற இந்த உலகத்தில் "ஜஸ்டிஸ்கட்சி ஒழிந்தது. இனி அதை நம்புவதில் சாரமில்லை; போடுகிறது போடுகிறோம்எல்லாம் சுயராஜ்யக்கட்சிக்கே போட்டுவிடலா"மென்று ஏமாந்துபோன படியால்தான் கொஞ்சம் வித்தியாசங்களால் நமது கட்சித் தலைவர்கள் தோற்றுவிட்டார்கள். நமது கட்சி பத்திரிகைகளை நாம் ஆதரித்து படித்திருப்போமானால் எதிரிகளின் சூழ்ச்சியால் ஏமாந்திருக்கவேமாட்டோம். பணகால் ராஜாவும் டாக்டர் சுப்பராயன் அவர்களும் எதிரிகள் சூழ்ச்சி செய்தும் வெற்றியடைந்தது ஆச்சரியமல்ல. எனெனில் சீர்திருத்தம் ஏற்பட்ட காலமுதலே அவர்கள் அங்கத்தவர்கள் அவர்களைத்தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களோ? ஜமீன்தார்கள் எல்லாம் படித்தவர்கள். தொகையோஐம்பது, அறுபது. மேலும் நமது கட்சிப்பத்திரிகைகளைப்பெரும்பாலும் வாசித்துவருபவர்கள். நிற்க, "குதிரை கீழேதள்ளியதுமல்லாமல், குழியும் பறித்தது" என்றமாதிரி நமது கட்சித் தலைவர்கள்மீதும் கட்சிப் பத்திரிகைகளின்மீதும் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வெறுப்பையும் உண்டாக்கி வருகிறது. இதை மறுப்பதற்கு வழி பத்திரிகைகளால்தான் ஆகும். பலபேர் வாயினால் சொல்வதைவிட ஒரு பத்திரிகை எழுதுவதையே ஜனங்கள் நம்புவார்கள். நமது மக்கள் பெரும்பாலோர் பத்திரிகை வாசிக்க ஏற்பாடு செய்யாவிட்டால் எத்தனை மகாநாடுகள் எத்தனை வருஷம் கூடினாலும் நமது முன்னேற்றம் ஒரு அங்குலங்கூட நகராது. பட்டணங்கள். கிராமங்கள் எல்லாம் நமது கட்சிப் பத்திரிகைகள் நிரம்பவேண்டும். இதற்கு வழி யென்ன? பத்திரிகை நடத்துபவர்கள் ஆங்காங்கு ஏஜண்டுகள் வைத்து சந்தாசேர்த்து பிரபலப்படுத்துவது முடியாதவிஷயம். முதலாவது அவர்களுக்கு ஊர் பேரே தெரியாது கஷ்டம், ஒருவரைப் பார்த்தால் தற்கால நாகரீகத்திலீடுபட்டு, கிராப்பு, காலே அரைக்கால் மீசை வைத்துக்கொண்டு உலக விவகாரம் தெரிந்தவர்போல் காணப்படும். ஆனால் விஷயத்தில் மிக சூனியமாயிருக்கலாம். ஒருவர் பழையகாலத்து பெரியவர்போல் சாதுவாகக் காணப்படலாம். அவர் விஷயம் எல்லாம் தெரிந்தவராயிருக்கலாம் இதை வெளியார் கண்டுபிடிப்பது முடியாத காரியம். உண்மையில் உங்களுக்கு நமது இயக்கமும் சமுகமும் முன்னேற வேண்டுமென்ற எண்ணமிருந்தால், "திராவிடன்" நல்ல அச்சு, சந்தா கம்மி, ஆசிரியர் கெட்டிக்காரர், விஷயங்கள் மிகப்பொருத்தம், "குடி அரசு" ஆகிமுதல் அந்தம்வரை படிக்கக்கூடியது. அநேக விஷயங்கள் இருக்கின்றன. வீரம் ததும்பி நிற்கிறது. பத்திரிகை என்றால் இதுதானய்யா பத்திரிகை மற்றது நான்ஸன்ஸ்; ஜஸ்டிஸ் ஆசிரியர் மிகுந்த படிப்பாளி, நன்றாக எழுதக்கூடிய ஆற்றலுடையவர், மிஸ்டர் மேனன் ஒருவரே போதும்; போதாததற்கு திராவிட சிங்கம் திரு ஏ. ராமசாமி முதலியாரும் ஆசிரியராக வந்துவிட்டார், பத்திரிகையும் ஜனவரி மாதத்திலிருந்து பெரிய உருவத்தில் அதிக பக்கங்களுடன் அநேக விஷயங்களை அடக்கி வந்துவிட்டது என்று நீங்களே படித்து நீங்களே மகிழ்ச்சி அடையாமல் ஒவ்வொரு சந்தா நேயர்களும் ஒவ்வொரு மாதமும் ஐந்து சந்தாதார்களைச் சேர்க்கவேண்டும். சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் ஐந்துவீதம் சேர்த்துவந்தால் ஒரே வருஷத்தில் பத்தாயிரக்கணக்கான பிரதிகள் வெளிவருவதைக் காணலாம். அப்போது நமது சுயமரியாதை தாண்டவமாடும். உங்களுக்கு எவ்வளவோ நண்பர்கள், பந்துக்கள் உண்டு. இந்த சொற்ப கைங்கரியத்திற்கு உங்கள் வார்த்தையை மீறமாட்டார்கள். அப்படி மீறுகிறவர்கள் சந்தாத் தொகைக்காகதான் மீறவேணும். சந்தா தொகை மலையல்ல. மாதம் ஒரே ஒருநாள் காப்பி ஓட்டலில் காலையிலோ மாலையிலோ எச்சிடம்பரில் சாப்பிடுவதில்லையென்று நிறுத்திவிட்டால் ஒரு மாதத்திற்கு "குடி அரசு" வீட்டுக்கு வரும். அதுபோலவே வாரத்தில் ஒரு நாள் ஏற்படுத்திக்கொண்டால் திராவிடனும், ஜஸ்டிசும் கதவைத் தட்டும். இது யாரால் முடியாது? எல்லாராலும் முடியும்; சொல்வதற்குத்தான் ஒருவர் வேண்டும் பத்திரிகை படிக்க விரும்பாத ஜனங்களேயில்லை. எப்போதையப் பேப்பரையோ அநேகம்போர் எழுதாதுவிடாமல் படித்துக்கொண்டிருப்பதை நான் பல தடவைகளில் பார்த்திருக்கிறேன்.

கடைசியாக ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். "குடி அரசு," "திராவிடன்," "ஜஸ்டிஸ்" சந்தாதார்களாகிய சகோதரர்களே! பத்திரிகைக்கு மாதம் 5 சந்தா சேர்த்துக் கொடுப்பீர்களானால் வேறே ஊழியம் ஒன்றும் செய்யவேண்டுவதில்லை. நமது இயக்கம் ஒரு வருஷத்தில் பத்து மடங்கு வளர்ச்சியடையும். அப்போது நமது பூஜ்ஜியர்களாகியதியாகமாதவர் ஆசிக்கு பாத்திரமாவீர்கள்.

க. வா. வேங்கிடாசலம் பிள்ளை.

---

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பிள்ளைகளைத் தன்குடும்ப எவலில் வைக்கிறான்; மைனர் தெளிந்த பிள்ளைகள் "எங்களப்பன்சொத்தில் எங்கள் பாகத்தைக்கொடுத்துவிடு" என்று கேட்க தமையன் கொடாமல்—கொடுத்தால் தன் சுகத்திற்கும் மதிப்பிற்கும் குறைவு வருமென்று நினைத்து கள்ளக்கணக்கும், திருட்டுக் கடனும், புரட்டுப் பத்திரங்களும், உண்டு பண்ணும் சகோதரனை ஞாயத்திற்குக் கொண்டுவர பந்து சிநேகக்கூட்டத்தில் ஞாயத்தை எடுத்துரைத்தால் மூத்தவன் சொல்லுகிறான் என் தம்பிகள் சகோதர துவேஷிகளென்று இதில் அண்ணன் துவேஷியா? தம்பிகள் துவேஷியா? பாட்டன் தேடிவைத்த பொருளை அப்பன் துர்வினியோகப்படுத்துவதைக்கண்ட மகன் "துர்வினியோகப்படுத்த உனக்கு அதிகாரமில்லை. உன் பாகத்தை எனக்குக்கொடு" என்று கேட்டால் அப்பன் மகனைப்பகைக்கிறான். இதில் யார் பகைக்குக்காரணஸ்தர்? ஸ்ரீமதி முத்துலட்சுமியம்மாள் சட்டசபையில் மந்திரிகளுக்கு ஆசுகூறவந்த இடத்தில் தாழ்ந்த நிலைமையிலிருக்கும் பெண்களின் பிரதிநிதியாகிய நான் பெண்களின் இடையூறுகளைத்தீர்க்கச்செய்யும் பிரயத்தனத்தில் தாங்களும் உதவியாக இருக்கவேண்டும் என்றார்கள் இந்தம்மாளும் இதைச்சேர்ந்த பெண்களும் புருஷத்துவேஷிகளா? ஆண் பெண் வகுப்புத்துவேஷிகளா?

(தொடரும்)

## தென்புலத்தாரை வழிபடுதல்.

பண்டைத் தமிழ் மக்கள் "தென்புலத்தார்" எனினும் "பிதிரர்கள்" எனினும் ஒக்கும். பிதிரர்கள் என்பவர் தேவகூட்டத்தாருள் ஒரு வகையைப்பிரிவினர். இப்பிதிரர்களின் உலகம் பரதகண்டத்திற்குத்தெற்றிலுள்ளதாகப் புராணங்கூறுவர் புலவர். ஆகையால் அவரைத் தமிழர் தென் புலத்தார் எனக்கருதினர். இத் தென்புலத்தவரொன்போர் நிறைந்திருப்போன மது மூன்றேஞர். ஆகையில் புராணங்களில் பிதிரர்களென ஒரு வகைத்தேவகூட்டத்தார் படைப்புக்காலத் தொட்டே இருந்துவருகின்றமையால் நம் முன்னோர் மேலும்; அப்பிதிரர்களேலும்; எல்லாம் ஓரிடத்திற்றிருக்கும் இடமுண்டு. அதிலும் எல்லாவற்றிலும் இறந்துபோன நம் முன்னோர்களையே தென்புலத்தார் என்று கைத்துக்கொண்டோம். அவர்களுக்கிருப்பும் வழிபாடே "சிரார்த்தம்" என்பது. இச்சிரார்த்தம் நமது காட்டில் அறியாதாரில்லை. தொன்று தொட்டு வழி வழி முறையாகச்செய்து வருகின்றனர். நிறத்தையோடு செய்யப்பெறுதல் சிரார்த்தம். இதனையாவர்செய்வது? எந்நாளந்நேரத்தில்செய்வது? என்னும் விஷயங்களை இது காலே விளக்கி வேலைண்டும்.

புராணங்களினும், ஸ்மிருதிகளினும், சிரார்த்தத்தைப்பற்றி பித்ரிய சிரார்த்தம், மாத சிரார்த்தம், வருஷதிவசார்த்தம் எனப்பலவகையாய்ப் பகுத்துரைக்கின்றனர். இவற்றுள் பித்ரிய சிரார்த்தம் செய்வோர் சிலர், ஏனை சிரார்த்தம் செய்வோர் பலர். இவ்வாறு சிரார்த்தத்தின் காரணம் என்னவெனின் இம்மனுஷ்ய லோகத்தார்க்கு ஒரு ஆண்டு தேவர்களின் காலத்தார்க்கு ஒரு நாளாகும். ஆகையால், நாம் ஆண்டிற்கொரு முறை வழிபடுதல்-சிரார்த்தம் செய்தல்-தென் புலத்தாரை நாளும் வழிபடுதலே ஒக்கும். நாம் பித்ரிய சிரார்த்தம் செய்தால் தென்புலத்தாருக்கு ஓர் நாளில் எத்தனை முறை வழிபடுதலே ஒக்கு மென்பதை அறிந்தோ ஆராய்க. ஆராய்ந்து யாது முடிவு சிரார்த்தம் பிதிரர்களுக்கு நாளில் ஒருவேளை ஒருநாள் உணவளிப்பது. பித்ரிய சிரார்த்தம் நாள்தோறும் ஒரு வேளை உணவளிப்பது! ஐயோ! நமக்கு! இக்காலை நாகரீக காலத்திலும் கூட ஆறுநாளுக்குமேல் உணவருந்துவாரைக்காணேம். நமது பித்ருக்கள் ஒவ்வொருநாளும் உணவருந்துவோராகின்றனர். அம்மம்! அம்மம்! தென்புலத்தார் அத்துணை உணவையும் எங்ஙனம் நிரணம் செய்துகொள்வரோ! அன்றேஞர் தேவராயினமையாலும், அப்பரிசாது புகல்வது புராணகாயினமையாலும், அதற்கு ஆராய்வதே பாவம் போலும்! அப்புராணக்கருத்தையில் பொதிந்துலவும் மருமங்களைக்கழலி வடிக்க இது அமையும் அன்று அன்றே.

தென்புலத்தாரைவழிபடுதல் என்பது இறந்துபோன நம் முன்னோரை உன்னி உன்னி உருகுதல்; முன்னோர்க்கு இன்ன பொருளையிடுவோம். அன்னார் நமக்கு அளிபுரிய அளிக்க வேண்டுவோம், புகழ்ந்து பேசுவதல்; நமது முன்னோர் நமக்குச் செய்த நிறைவினை ஓர் நாளில் ஒருமுறை நினைவுகூர்தல் முதலியனவாம். அன்னார் பெயரால் ஏழைகளுக்கு உணவளித்தல், உடுக்கை யளித்தல், அன்னார் பெயரால் கோயில் கட்டுவித்தல் முதலிய அறங்களைச்செய்தல்,

## சென்னிமலை செங்குந்தர் காமாட்சியம்மன் ஆலய பரிபாலன சபையின் 12-வது ஆண்டு நிறைவு விழா.

காமாட்சியம்மன் ஆலய பரிபாலன சபையின் 12வது ஆண்டு நிறைவு விழா 16-1-27-ந் தேதி சென்னிமலை காமாட்சியம்மன் ஆலயத்தில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீமான் நாயக்கரவர்கள் தேவஸ்தான கமிட்டி மீட்டிங்குக்காக அன்றுகாலை 7-30 மணிக்கே சென்னிமலைக்கு வந்து சேர்ந்தார். மாலை மூன்று மணிக்கு ஸ்ரீமான் நாயக்கரவர்களை ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமி முதலியார் அவர்களது இல்லத்திலிருந்து மேடை சபையார் மேள வாத்தியத்துடன் காமாட்சியம்மன் ஆலயத்திற்கு நகர் வலமாக குடைகொடி விருதுகளுடன் மோட்டாரில் அழைத்துச் சென்றார்கள். மேடை சபைக்கு அடியிற்கண்ட கனவான்கள் விஜயம் செய்திருந்தனர்.

ஸ்ரீமான்கள் பூந்துறை துரைசாமிக் கவுண்டர் ஈ. ஆர். கந்தசாமிக் கவுண்டர், டி. குருமூர்த்தி செட்டியார், K. S. ரங்கைய கவுண்டர், கே. கிருஷ்ண முதலியார், எஸ். கே. ராமசாமி முதலியார், வி. எஸ். முருகேச முதலியார், வி. எஸ். செங்கோட்டைய முதலியார், கோவில் தர்மகர்த்தா முதலிய பிரபல வியாபாரிகளும், மிராஸ்தார்களும் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டம் ஏராளமாகக் கூடியிருந்தது. ஸ்ரீமான் நாயக்கரவர்கள் தலைமை வகிக்க வேண்டுமென ஸ்ரீமான் மு. பழனியப்ப முதலியார் அவர்கள் பிரேரேபிக்க ஸ்ரீ முருகேச முதலியார் அவர்கள் ஆமோதிக்க ஸ்ரீ நாயக்கரவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே தலைமை வகித்தார். ஸ்ரீமான் வி. எஸ். செங்கோட்டையா அவர்களால் சபையின் சார்பாக ஸ்ரீமான் நாயக்கரவர்களுக்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டதும் சபையின் காரியஸ்தராகிய ஸ்ரீமான் பழனியப்ப முதலியாரவர்களால் சங்கத்தின் வருஷாந்திர அறிக்கைப் பத்திரமும் படிக்கப்பட்டது. அதன்பின் ஸ்ரீமான் நாயக்கரவர்கள் நீண்ட தோர் பிரசங்கம் புரிந்தார்.

### ஸ்ரீமான் நாயக்கரவர்கள் பிரசங்கத்தின் சாராம்சமாவது.

சபையோர்களே! நீங்கள் எனக்கு வாசித்துக்கொடுத்த உபசாரப் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கும் புகழ்ச்சிக்கு நான் பாத்திரனல்லன். நான் உங்களோடு சேர்ந்த ஓர் குடித்தனக்காரனுகவும் சகோதரனுகவும் பழகிவந்தவனுகையால் உங்கள் மத்தியில் நான் இவ்வளவுமதிக்கப்படுவதையும் புகழப்படுவதையுங்கண்டுவெட்கமடையவேண்டியவனுகவே யிருக்கிறேன். காரியதரிசியார் வாசித்த அறிக்கை ரிபோர்ட்டிலிருந்தே இச்சங்கம் தனது கடமையைச்சரிவர செய்து வந்திருக்கிறதென்று தெரியவருகிறது. நம்நாட்டில் எத்தனையோ சங்கங்கள் தோன்றினலும் உங்கள் சங்கங்கள் போல் 12, 14 வருடங்களாக உயிருடனிருக்கும் சங்கங்கள் வெகு சிலவேயாகும். ஆரம்பத்தில் ஊக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு சிக்கிரம் உயிர்போய் இருந்த இடமே தெரியாமல் போவது வழக்கமாயிருக்கிறது. அதுபோலவே நம் நாட்டில் அநேகம் தோன்றி நின்றுபோயிருக்கின்றன. இச்சங்கத்தின் வளர்ச்சிக்குக் காரணம், இச்சமூகத்தினருக்கு தங்கள் சமூக முன்னேற்றத்திலிருக்கும் அக்கரையே காரணமாகும். நான் அநேக சங்கங்களுக்கு அழைக்கப்பட்டுப் போயிருக்கிறேன். எங்கெங்கு வியாபாரிகளால் சங்கங்கள் நடத்தப்படுகின்றனவோ, அந்த சங்கங்கள்தான் நீடித்து நடந்துவருகின்றன. குடித்தனக்காரர்கள் சங்கத்திற்கும் வித்தியாசம் உண்டு. அதிலும் வக்கீல்கள் சங்கம் விபரீதமானது. அவர்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு சுயகலத்தை நாடி ஒரு சங்கத்தைத் தோற்றுவிப்பார்கள். உடனே காரியம் தீர்ந்ததும் அச்சங்கம் இருந்த இடம் தெரியாமற் போய்விடும். கொஞ்ச நாளைக்கு முன் இவ்வூரில் நடந்த செங்குந்த மகாஜன சங்கமும், இந்த சங்கமும்தான் 12, 14 வருஷங்களாக சரிவர நடந்துவந்திருக்கின்றன. நம் நாட்டில் இப்பொழுது ஒவ்வொரு மாபினர்களும் ஒவ்வொரு சங்கம் ஸ்தாபித்து தங்கள் தங்கள் சமூகத்தைச் சீர்திருத்தம் செய்துவருகின்றனர். கொங்குவேளாள சங்கம், வன்னிகுல சங்கம், நாடார்குல சங்கம், அருந்ததியார் சங்கம் நாவிடர் சங்கம், குலாலர் சங்கம், இவ்வாறு பலசமூக சங்கங்கள் தோன்றி வேலைசெய்து வருகின்றன. நாடார் மகாஜன சங்கம் தோன்றி 30 லக்ஷம் ரூபாய் மூலதனத்துடன் அச்சங்கம் நடந்துவரு, கிறதாம் வருஷம் 65 ஆயிர ரூபாய் அச்சங்கம் ஒரு ஹைஸ்கூலுக்கும், கோவிலுக்கும் பிரசாரத்திற்குமாக செலவுசெய்து வருகிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் தங்களுக்குள் ஒரு சங்கம் ஏற்பாடு செய்து அதன் மூலமாகத்தான் தங்கள் சமூகத்தைப் பல வழியிலும் சீர்திருத்தம் செய்து கொண்டு வருகின்றனர். அவர்களுக்குள் சங்கம் தோன்றியபின்தான் அநேக பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டார்கள். செங்குந்த மகாஜன சங்கத்தினர் அரிய வேலை செய்து முடித்திருக்கின்றனர். கொஞ்ச நாளைக்கு முன் கொங்குவேளாள சங்கம் தோன்றினலும் அது செய்யவேண்டிய வேலை அநேகமிருக்கின்றன. இச்சங்கத்தாரும் பணம் வசூலிப்பதும் சேகரிப்பதும் மட்டும் தங்கள் வேலையாக நினைக்கக்கூடாது. மடங்களைக் கட்டிவிடுவதால் மட்டும் பலனில்லை. சபையார் தங்கள் சமூகத்தில் பல ஊர்களிலும் கிளைச்சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டும். இச்சமூகத்திலுள்ள வாலிபர்கள், சமூக சீர்திருத்தத்திற்கு முன்வந்து பாடுபடவேண்டும். சங்கங்களாலேதான் உலகத்தில் அநேக காரியங்கள், அக்காலத்தில் செய்து முடித்திருக்கின்றனர். இவ்வூரில் எந்த சங்கம் தோன்றினலும் நன்முகவே நடந்துவரும். இங்குள்ள செல்வவந்தர்கள் நன்கு பொதுநலமுணர்ந்து தர்மம் செய்துவருகிறவர்கள். அவர்கள் பொது விஷயத்திற்கு தாராள சிந்தையுடன் பொருளுதவி செய்துவருகின்றனர். இந்த ஜில்லாவிற்கே இவ்வூர் வாசிகள் பொதுவிஷயத்தில் செலவிடுவதில் பெயர் வாங்கியிருக்கிறார்கள்.

### ஒற்றுமை.

ஏந்தச் சங்கம் மேன்மைக்கு வரவேண்டுமானலும் ஒற்றுமை வேண்டும். ஒற்றுமையில்லாத சங்கம் முன்னுக்கு வரப்போவதில்லை. சங்கத்திலுள்ளவர்களிடம் இன்னெரு முக்கியமான குணம் வேண்டும். அதாவது சமத்துவம் வேண்டும். ஒவ்வொரு சமூகத்தாரும் தங்களுக்கு மேலானவர்களில்லையென்று சொல்லவருவதுபோல் தங்களுக்கு கீழானவர்களுமில்லை என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும் அப்பொழுதுதான் ஒற்றுமையை நிலைநிறுத்த முடியும். ஒரு சமூகத்திலோ ஒரு சங்கத்திலோ தாழ்மை மேன்மை என்ற வித்தியாசங்கள் வாக்கூடாது. அதிலும் பணக்காரர்கள் இந்த விஷயத்தில் தாழ்மையாக நடந்துகாட்ட வேண்டும். பணக்காரர்கள் ஆடம்பரமின்றி நடந்துகாட்டினுல் மற்றவர்களும் அதைப் பின்பற்றுவார்கள். சங்கங்களில் ஸ்தானங்களை விரும்புகிறவர்களுக்கு விட்டுவிடவேண்டும். உண்மையாகப் பொதுநல ஊழியம் செய்கிறவனுக்கு பதவியோ ஸ்தானங்களோ வேண்டியதில்லை. ஒரு சமூகம் முன்னேற்றமடைவதென்றால் ஏதோ அச்சமூகத்தில் ஒருசிலர் பணக்காரர்களாயிருந்தால் மட்டும் அச்சமூகம் முன்னேற்றம் அடைந்து விட்டதாகச் சொல்லமுடியாது. அச்சமூகத்தில் ஏழைகளில்லாமல் செய்துவிடவேண்டும். ஏழைப் பிள்ளைகளுக்கு கல்வி கைத்தொழில் சொல்லிக்கொடுக்க வழி தேடவேண்டும். ஒரு சமூகத்தில் சிலர் கவுன்சிலராகவும் போர்டு மெம்பர்களாகவும் இருந்தால் அச்சமூகம் முன்னுக்கு வந்துவிடாது. ஒரு சமூகமென்றிருந்தால் அச் சமூகத்தில் ஏழைகளில்லாமலும் மனச்சாட்சியை விற்று ஜீவிக்கிறவர்கள் இல்லாமலும் செய்வதுதான் சரியான சமூக சீர்திருத்த வேலையாகும். சமூக சீர்திருத்தமென்பது ஒரு சமூகத்திற்கு கல்வி, கைத்தொழில் முதலிய வசதிகளை உண்டாக்கிக் கொடுத்து ஏழைகளை முன்னுக்கு கொண்டு வருவதுதான். இன்னும் சூது, குடி, வேசி முதலிய கெடுதிகளை சமூகத்தினரிடமிருந்து அகற்ற பிரசார மூலமாக வேலைசெய்ய வேண்டும். ஒரு சமூகத்திற்கு சுயமரியாதை வேண்டுமானுல் தொழிற்கல்விதான் மிக்க அவசியமானது. இத்தகைய காரியங்களை நீங்கள் செய்ய சங்கமும் ஒற்றுமையும் உங்களுக்கு பெரிய உதவியாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

### கதர்.

உங்கள் சமூகத்திற்கு உற்ற தொழில் நெசவுத்தொழிலானதால் அது இன்னும் கொஞ்ச நாளையில் நமதுநாட்டில் அடியோடு அழிந்துபோகாமல் இருப்பதற்கு கதர் முக்கியமானது; உங்கள் சமூக நன்மையையும் கிராமத்து ஏழைப் பெண் மக்களின் நன்மையும் உத்தேசித்தே மகாத்மா கதர் திட்டத்தில் வேலைசெய்கிறார். ஆதலால் நீங்கள் அவருக்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருப்பதற்கு கதர் உடுத்துவதுடன் அத்திட்டம் நிறைவேற உதவி செய்யவேண்டும் என்று பேசிமுடித்தார்.

## செய்தித் திரட்டு.

**திருச்சிக்கல் போருள் வைத்த சேரி** செங்குந்த வாலிபர் சங்கம் 14-1-27-ந் தேதியில் திரு வாளர் சொ. சு. கந்தசாமி முதலியார் தலைமையில் கூடி நிறைவேற்றிய தீர்மானப்படி சமூக வாலிபர்களும், ஏனைய வாலிபர்களும் தேசிய பஜனை சோஷ்டியுடன் உற்சாகத்தோடு "பொங்கல் வகுல்" செய்ததாகக் காரியதரிசி ஸ்ரீமான் நாகப்ப முதலியாரறிவிக்கிறார்.

* * *

**தூத்துக்குடி** மா. வே. சண்முகவேல் காடார் ஞாபகார்த்த வாசகசாலையின் முதலாண்டு நிறைவு விழா பாளையங்கோட்டை வழக்கறிஞர் ஸ்ரீமான் தானியேல்தாமஸ் நாடார் பி. எ., எம். எல். சி. அவர்கள் தலைமையின் கீழ் வெகு சிறப்பாக நடை பெற்றதாக காரியதரிசி அறிவிக்கிறார்.

* * *

**கோயமுத்தூர் தாலூகா அந்தியூர்** ஸ்ரீமான்கள் என். அரங்கசாமி நாயுடு என். இராம கிருஷ்ணம நாயுடு அவர்கள் தங்கள் தகப்பனார் சொர்த்தத்திற்கு கம்மவார்ப் பெரியோரைக் கொண்டு சிரார்த்தம் செவ்வனே செய்து முடித்தார்கள். இவ்வாறான சிரார்த்தங்கள் செங்காளி பாளையம், வையம்பாளையம் முதலிய இராமங்களிலும் நடை பெற்று வருகின்றன. மஹா ஜனங்கள் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றனர். "இச்சுயமரியாதை இயக்கம்" பலவூர்களிலும் பரவச்செய்வதற்காக ஸ்ரீமான் என். இராமகிருஷ்ணம நாயுடு அவர்கள் வகுப்பு வரக்கங்கொண்டுள்ளார்கள். அன்னார் வரக்கத்திற்குத் தினைபுரிந்து நம்பவர் சுயமரியாதையைக் காப்பாற்றல் கடமையாகும் என பூலோவாசி அறிவிக்கிறார்.

* * *

**பெண்ணாடம்** ஸ்ரீமான் அ. ரா. இரத்தின முதலியார் வீட்டு "இருகப்பிரவேசம்" வெகு சிறப்பாக நடை பெற்றது. ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. காலை 10 மணிக்கு சிதம்பரம் ஸ்ரீமதி ஜனகத்தம்மாள் தலைமையின்கீழ் மூவலூர் ஸ்ரீமதி இராமாமிருதத்தம்மாள் செங்குந்த மாபினர் முன்னேற்றத்தைப்பற்றியும் லலேயமாதேவி ஸ்ரீமதி இராஜாம்பாள் "புலால் மறுத்தல்"ப் பற்றியும் பேசினார்கள். தலைவர் முடிவுரையில் செங்குந்தர் குலத்தொழிலாகிய நெசவு, கதர், ராட்டினம் விர்த்திசெய்ய வேண்டுமென்றும் தங்கள் குலத்திலேயே புரோகிதர் நியமிக்கவேண்டுமென்றும் வற்புறுத்திய பின்னர் கூட்டம் முடிவற்றதென ஸ்ரீமான் சோமசுந்தர முதலியாறிவித்திருர்.

* * *

1. **சேலத்தில்** 20-1-27-ந் தேதி நகரமண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் ஸ்ரீமான் **ஸ்ரீராமுலு** செட்டியார் பி. எ., பி. எல். அவர்கள் தலைமையின் கீழ்கூடி "எற்கனவே சேலம் முனிசிபல் சவுன்சில் தீர்மானித்தபடி சேலம் கல்லூரி கட்டடங்களை விக்டோரியா மார்க்கட்டிற்கு அணித்தாயுள்ள காலேஜ் ஹாண்டல் நிலத்தில் கட்டவேண்டுமென்றும், இது விஷயமாய் செவ்வாய்ப்பேட்டை வாசிகளிற் சிலர் எதிரிடையாய்த் தெரிவித்த அபிப்பிராயத்தை இக்கூட்டம் பல மாகக் கண்டிக்கிறதென்றும், சேலம் டவுனின் தண்ணீர்க் கஷ்டத்தை அநுசரித்து இங்காரின் 2/3 வைறுகளுக்கு ஜலவருவாய்க்கு ஆதாரமாயுள்ள சக்கிலி வரியை கட்டடங்கள் கட்ட எக்காலத்தும் தூர்க்கக்கூடாதென்றும் தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றியதாக அக்கூட்ட அக்கிராசனர் ஸ்ரீமான் பி. ஸ்ரீராமலு செட்டியார் பி. எ. பி. எல். அறிவிக்கிறார்.

* * *

**திருச்சி கீழப்பாக்கையில்** 20-1-27-ந்தேதி மாலை 5 மணிக்கு ஸ்ரீமான் ஜே. வெங்கடாசலபதி பி. எ எல். டி. அவர்கள்(முனிசிபல் & செனெட் உறுப்பினர்) திரு. க. பிச்சைமுத்து பண்டிதரின் "பிரமமுனிசித்தவைத்தியசாலையை"த் திறந்து வைத்தாரென ஸ்ரீமான் பா. சுந்தராராஜபண்டிதர் அறிவிக்கிறார்.

* * *

**மேலூர் தாலூகா** கவட்டயம்பட்டியில் சில முக்கியஸ்தர்களின் ஆதரவில் பாவலர் அரங்கன் ஸ்ரீமான் சொக்கலிங்கத் தேவரவர்களால் திரு விளையாடற் புராணம் படனம் செய்யப்பெற்று தை மாதம் 5-ந் தேதி பட்டாபிஷேகம் செய்யப் பட்டது. பின்னர் காந்தி மைதானத்தில் ஸ்ரீமான் ஆ. கரு. பெரியசாமியம்பலம் அவர்களின் தலைமையில் ஒரு பெருங்கூட்டம் கூடியது. அதில் பிரத்தானந்தரிறந்தமைக்கு அநுதாபங்காட்டி அவரது வரலாற்றைப்பற்றியும் பார்ப்பனர் சூழ்ச்சியை வெட்டவெளியாக்கும் "திராவிடன்" "குடி அரசு" "தமிழ் நாடு" பத்திரிகைகளை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும், மதுரை, திருநெல்வேலி முதலிய விடங்களில் நாடார்களைக் கோவிலுக்குள் நுழையவிடாது திருக்குங் கொடுமைகளைக் குறித்தும் மதுரைத் தீர்மானப்படி அவ்வகுலத்திலேயே குருக்கண்மாரை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தைக் குறித்தும் வற்புறுத்தப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னர் கூட்டம் முடிவற்றதென வ. வெ. சு. சொக்கலிங்கண்டியம்பலம் எழுதுகிறார்.

* * *

**நாகபட்டணத்தைச்சேர்ந்த திருச்சிக்கல்போருள் வைத்தேரி** மேலத் தெருவில் நாளது அக்ஷயவருஷம் தை மாதம் 6-ந் தேதி புதன்கிழமை இரவு 8-30 மணிக்கு திரு. பழனியப்ப முதலியார் அவர்களுக்கும் சௌ. தெய்வானையம்மாளுக்கும் பார்ப்பனீயம்ஒழித்தவிதவா மணம்நடைபெற்றதென ஓர் செங்குந்தவாலிபர் எழுதுகிறார்.

* * *

திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் தாலூகா முடித்தானேந்தல் புதூரிலிருக்கும் மருத்துவர்களின் புண்செய்ப் பயிர்களை 6-12-27-ம் நாள், அவ்வூரில் உள்ள துஷ்டர்கள் சிலர் சுமார் 200 ஆடுகளை பயிரில்விட்டு பூவுங்காயுமாகவிளைந்திருந்ததை நாசமாக்கிவிட்டார்கள். நிலத்துக்குரிய மருத்துவர் ஸ்ரீ வைகுண்டம் வாவக்குளம் அவுட் போலீஸ் ஸ்டேஷனில் எழுதிவைத்திருக்கிறார். மூலைக்கரைப்பட்டியில் மருத்துவர்கள் குடிக்கத் தண்ணீரில்லாமலும், கடைகளில் உணவுப்பொருள்கள் விலைக்குக் கிடைக்காமலும் துன்பப்படுகிறார்கள். இப்படி சுமார் நான்கு வருடங்களாக திருநெல்வேலி ஜில்லாவில் மருத்துவர்கள் துன்பங்கள் ஒழிந்தபாடில்லை. சுயராஜ்யம் வேண்டும் என்னும் தலைவர்கள் இதனைக்கவனிக்கவேண்டும். உயர்ந்த ஜாதியாகஎண்ணிஇறுமாந்திருப்பவர்கள் சவுளத்தொழிலும், பயிர்த்தொழிலும் செய்கிற மருத்துவர்களை கட்டாயப்படுத்தி வேறு தொழிலைச் செய்யவேண்டுமெனவும், தங்கள் விருப்பப்படி நடவாதவர்களை பல வகையாலும் இம்சிக்கிறதென்றால் இது என்ன நீதியாகும். ஆங்கில ஆட்சியிலேயே இந்தக்கொடுமை நடந்தால், சிறு வகுப்பினராகிய ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்களுடைய கதி என்னவாகும் என்பதை வாசகர்களே அறிந்துகொள்ளலாம். என்று ஸ்ரீமான் எஸ். கே. ஞானசுந்தரம் அறிவிக்கிறார்.

* * *

தமிழ்வைத்திய சங்கச் சித்த வைத்திய 3வது மகாநாடு கண்காட்சி. 1927ஆ எப்பரல் மாதம் 10, 11, 12, 13, 14, தேதிகளில் வளர்ச்சி நெறி அமைச்சர் மானரபில் திவான்பகதூர் R. N. ஆரோக்யசாமி முதலியார், B. A. B. E. M. L. C. தலைமையின் கீழ் மதுரையில் நடைபெறுமென திரு வி. சிவஞானயோகி அறிவிக்கிறார்.

## இன்னும் பிராமணீயமா?

திருவாங்கூரைச் சேர்ந்த கொட்டாரக் கரையில் காலஞ் சென்ற ஸதாநந்த சுவாமிகள் தண்ட ஆசிரமமொன்றனது. அதில் தற்பொழுது சுவாமி ஆத்மாநந்த பாரதி அவர்கள் தலைமை வகித்து வருகிறார்கள். அன்னர் இப்பொழுது ஒரு குருகுலங்கண்டிருக்கிறார்கள். அதில் இப்பொழுது தாழ்த்தப்பட்டவர்களைச்சேர்க்கப்படவில்லை. இதைப்பற்றி, சுவாமிகள் குருகுல நிதி திரட்டநாகர் கோவில் வந்தபொழுது ஸ்ரீமான் டாக்டர் M. E. நாயுடு அவர்கள் பேட்டி கண்டு பேசினார்கள். அதற்கு சுவாமிகள் பிறப்பினாலேயே பிராமணர்கள் உயர்ந்தவர்களென்றும், ஏனையோர் ஸம்ஸ்காரத்தினாலேயே உயரவேண்டுமென்றுங் கூறி சேரமாதேவிக் குருகுலம் நாசமாவதற்குக் காரணம் தாழ்த்தப்பட்டவர்களைச் சேர்த்ததினாலேயே யென்றுங்கூறினார்கள். அதற்கு டாக்டர் அவர்கள் தாழ்த்தப்பட்ட ஹிந்துக்களை ஏனைய மதத்தவர் வலிந்து இழுக்கும்போது ஹிந்து மதத்தவரான நாம் அகற்றுவது அழகாகுமாவென்றுகேட்டார்கள். அதற்குசுவாமி அவர்கள் ஸம்ஸகாரமடைந்தால் யாவரையும் எடுத்துக்கொள்ளப்படுமென்றும் அக்காலம் தனக்குத்தெரியுமென்றும், அதற்து ஆயிரம் ஆண்டுகள் ஆயினும் பரவாயில்லை யென்றுங் கூறினார்கள். இதைக்கேட்டவுடன் டாக்டர் அவர்கள் மனிதனை மனிதனுக்கு அடிமையாக்கும் உங்கள் ஹிந்து மதம் அழிந்து ஒழிகவென்று கூறி வெளிவந்தார்கள். இதைப்பற்றிடாக்டர் அவர்கள் ஸமுதாயத்தலைவர்களில் ஒருவரான ஸ்ரீமான் மன்னத்துபத்மநாப பிள்ளை அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதிக்கேட்டார்கள். அதற்கு பிள்ளையவர்கள் சுவாமிகளின் வைதிகப்பார்ப்பனீயம் தனக்குப் பிடிக்கவில்லையென்றும் இதை முன்னிட்டுத்தான் இதற்கு முன்தான் ஒரு அபிப்பிராயமும் கொடுத்ததென்றுங் கூறி பதிலிறுத்தனர். ஜாதி பேதமும், தீண்டாமையும், நீங்கவேண்டுமென்று மும்முரமாக வேலை நடந்து வருமிவ்வேளையில் ஹிந்து மதம் இத்தீண்டாமையெனுங்கொடுமையால் ஆயிரக்கணக்கான மக்களை ஆண்டுதோறும் அன்னிய மதத்திற்கு கொடுத்துவருமிக்காலத்தில் பாலர்களுடைய மாசற்ற ஹிருதயங்களில் பேதநிலையைஉண்டாக்காதவாறு காப்பதற்குமாறாக பேத நிலையை உண்டுபண்ணுவது கூடாது. சுவாமிகள் ஒரு பிராமணரல்லாதாராக விருந்தும் பார்ப்பனீயத்தை ஆதரிப்பது கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். சுவாமிகளும் சேரமாதேவி குருகுலத்தின் பேத நிலையால் வசூலான பணத்தைக்கொடுக்க மறுத்துவிட்ட செட்டி நாட்டுக்குச்செல்வாரென்று தெரிகிறது. மாணவர்களுக்கிடையே பேதநிலையைப்புண்டு பண்ணுகிறதால் தான் அங்கே செல்வாக்குகிடைக்குமேயொழிய அல்ல நில்லை. தன் குருகுலம் நல்லநிலையையடையவேண்டுமானால் தன் கொள்கையை அடியோடு விட்டுவிடவேண்டும். இனியாவது சுவாமிகள் தங்கள் கொள்கையை மாற்றி விடுவார்களென்று நம்புகிறேன்.

(உண்மை ஹிந்து)

குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

## இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஆம் டிசம்பர் மாதத்தில்ஸ்தாபிக்கப்பட்டது.)

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... ... | ரூ. | 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ... | ரூ. | 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... ... | ரூ. | 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் ... ... ... | ரூ. | 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் நிரவியம் ... | ரூ. | 2706—0—0 |
| நடை முதல் தொகை ... ... ... | ரூ. | 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

**சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவு:**—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணு. இதற்கு பிரதி மாசமும் வட்டி கொடுக்கப்படும்.

**பிக்செட் டிபாசிசிட்டு ஒரு வருஷ கெடுவு:**—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு ஒருவருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் வைப்புக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனன், ரண்டுக்கிராயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையிலாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும்செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள்செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீடில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஐவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவராலும் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடாலும், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும்,ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவராலும், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாவிட ராலும், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வதுபக்கம் (2) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார், மானேஜிங் டைரக்டர்.

---

மலபார் ஜில்லா, தாலூகா, கடுப்பு, எரிவந்தம் வலி முதலான சகலவிதமான ரோகங்களையும் குணப்படுத்தும்

டப்பி 1-க்கு விலை ரூ. 1—8—0

(வி. பி. கட்டணம் பிரத்தியேகம்.)

விவரம்:—

## தாலாடி.

ஆயிரக்கணக்கான நற்சாகூஷிப் பத்திரங்கள் பெற்று

சிறந்ததில் குணத்தைத் தருகிறது.

## ராஜ லவங்கத்திய தைலம்

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

டாக்டர், M. G. நாராயணசாமி முதலியார்.

---

ஸ்ரீவில்லிபுத்தூர்

## P. P. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

**அரரூட் பிஸ்கட்.**

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

**சூஸ்பரி பிஸ்கட்.**

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

**பழம் கேக்.**

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.

---

இனும் இனும்!!

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை வியாதிகள் இல்லற சார சங்கி ரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,

தபாற் பெட்டி 222, மதராஸ்

---

ஆயிரக் கணக்கான நற்சாகூஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யா தொரு நோயுமில்லாத் ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம். சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பல்ஹீனம், சரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த சரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து கல்ல நிடகாத்திர சரீரத்தை உண்டாக்கும்.பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண்ட் கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமும் மில்லை. எவ்வித பத்தியமும் மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை நினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இலவமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



சித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது "ஆநந்த குண போதினி."

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இலவம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0

சித்திரை மாதத்திலிருந்து வெளிவந்து துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

1000 தொழில் முறைகள்.

கூலிக்காரன் தொழில் முறைகளைக்கற்று தன் முயற்சியால் சீமானுயினன்

பற்பொடி, தேன் விஷ சஞ்சீவி, வீரிய விருத்தி மாத்திரை, அஞ்சனம் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் புத்தகம் விலை ரூ. 4-0-0 வி.பி. வேறு. இதன் 14பக்கம் விபரப்புத்தகம் இலவம். எமது கைத்தொழில் புத்தகளின் கேட்லாக் இலவம்.

ஆர்ட் புக்ஸ் கம்பெனி.
26 திருச்சிலுப்பள்ளி.

சர்ப்பத்து, ஐஸ்கிரீம், இங்கி, கண்ணாடி ஒட்டும் சொலுஷன், செயறகை தங்கம், தீப்பெட்டி, சிகரெட்டு, ரசம்பூசுதல், ரப்பர் ஸ்டாம்பு, சோப்பு, சென்டு, கூந்தல் தைலம்,

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களே வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு 1½ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.

அந்திய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், கெ. 302, தங்கசாலைத் தெரு, மதரஸ்.

பெட்ரோமாக்ஸ் லேட்.

லேட்கன், மாண்டில், டும், தனித் தனி சாமான்யாவும் விலையமாய் கிடைக்கும். கியாட்லாக் இலவம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.